தென்றல்

ஆசிரியர் : கண்ணதாசன்

" போற்றுபவர் போற்றட்டும் ;
—புழுதிவாரித்
தூற்றுபவர் தூற்றட்டும் ;
தொடர்ந்து செல்வேன் !
ஏற்றதொரு கருத்தை எனது
உள்ளம் என்ருல்
எடுத்துரைப்பேன் ; எவர்வரினும்
நில்லேன் ; அஞ்சேன் ! "

உள் நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணு. | வெளி நாடு மூன்றணு. | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-14.

மலர் 1 | சென்னை 13—11—1954 சனிக்கிழமை | இதழ் 20

நம்மைப் 'போ' என்கிருர், நாடோடிகள் தலைவர் !

'மதம் மக்களுக்கு அபின்' 'மதமெனும் பேய் பிடியாதிருக்க வேண்டும்' 'மதமே மானிட இனத்தைப் பிளவு படுத்துகிறது' வாழ்கின்ருர் முப்பத்து முக்கோடி மக்களென்ருல் சூழ்கின்ற பேதம் அத்தொகை யொக்கும்' என்ற நிலை இருக்கக் காரணமே மதம். அது மானிட இனத்தின் அறிவை-ஆற்றலை-சக்தியை-தவருன பாதைகளில் திருப்பிவிட்டு மனிதப் பண்பினின்றும் மக்களை மாற்றிவிடும் போதை' என்றெல்லாம் ஆன்ருேரும்-சான்ருேரும் அன்று தொட்டு விளக்கி வருகின்றனர்.

சாதிப் பூசலையும்-சமயச் சண்டையையும் வளர்த்துவிடும் இந்த தொத்து நோய் பரவக் கூடாது, என்பதற்கு சான்று பல கூறி-ஆதாரங்களை அடுக்கிக் காட்டி-உருண்ட தலைகளை எண்ணி வைத்து-ஓடிய ரத்த ஆற்றைக் கணக்கிட்டு-குவிந்த பிண மலையை-கொடுமைக்கு ஆளானோரின் பட்டியலை நினைவுபடுத்தி-மனித சமுதாயத்தின் வளர்ச்சியை அறிந்தோர் ; எண்ணத் தெரிந்தோர் அதை எடுத்துச் சொல்லத் துணிந்தோர் ; நேர்மையை உணர்ந்தோர்-அதை நெஞ்சில் கொணர்ந்தோர் : நடுநிலை பிறழாதோர் ஆக பலரும்-மத நம்பிக்கை மனிதனின் தன் நம்பிக்கையை இழக்கச் செய்கிறது : தன் நம்பிக்கை இழப்பதால் ஆண்மை குறைகிறது-அறிவு குழம்புகிறது-அதன்விளைவால்-பித்தம் வளர்ந்து-'வெறி'யாக உருவெடுத்து விபரீத சூழ்நிலை பலவற்றிற்கு காரணமாகிறது. 'கள்ளைக் குடித்தவன் அறிவை மட்டும்தான் இழக்கிருன். ஆனல் 'மதக் கள்' உணர்ச்சியையும் இழக்கச் செய்கிறது. நாக்கில் கம்பி பாய்ச்சினுலும், முதுகில் இரும்பு ஊசிகளை குத்தினுலும், பொறுத்துக் கொள்ளுகிருன் : அந்த அளவிற்கு 'மத போதை' மனிதனை மதி இழக்கச் செய்கிறது. இந்த பெரும்பித்தம் தெளிவதற்கோ மார்க்கம் காணவில்லை-மாருக-'நித்தம் ஒரு தரம் நினைவுடனே சிவன்சத்தமிருந்தால் கிறது நமக்கெல்லாம். விலங்கு நிலையிலிருந்த மனித இனம் விலகி வந்துவெகு நாட்களாகிவிட்டன. குகைகளில் வாழ்ந்த மனிதன் 'வெள்ளை மாளிகை' யிலும் 'பக்கிங்காம்' அரண்மனையிலும்' செங்கோட்டையிலும் வாழக்கற்றுக் கொண்ட காலம் இது. ஆனல்...

'மதம் வாழவேண்டும்'

'மதப்பூசல்கள் வளர வேண்டும்'

'சமுதாயத்தில் பேதங்கள் பெருகவேண்டும்'

'உடைந்த தலைகள் போதாது'

'ஓடிய ரத்தம் மிகக்குறைவு'

மதத்தின் அடிப்படையிலே பிறக்கின்ற ஜாதி பாகுபாடு மூடநம்பிக்கை-உயர்ந்தவன் - தாழ்ந்தவன் என்ற பேதம் பெருக வேண்டும், நால்வகை பிரிக்கும் வர்ணுசிரம தர்மம் ஓங்கவேண்டும். பல மதங்கள் இருந்தால்தான் நாடு பார்ப்பதற்கு அழகான நந்தவனம் போல் காட்சி அளிக்கிறது. இவ்வளவையும்-இதற்குமேலும் கூறி இருக்கிருர் ஒருவர். ஆனல் இத்தனை வரி கடுஞ்சுரத்தில் ஒரு பகுதியினர் அம்மை நோயால் கொஞ்சம் பேர் தொழு நோயால் பலர் இப்படி மக்கள் பல நோயால் - வாட்டப்படும் போதுதான் நாடு பார்ப்பதற்கு கொலுமண்டபமாக காட்சி தருகிறது என்கிருர் ஆச்சாரியார். சென்ற 28-10-54 அன்று 'பத்திரிகா தர்மம்' சிறிதும் தவரு 'தினமணி' ஏடு இந்த 'கூவத்துப் பேச்சை' கொட்டைத் தலைப்பிட்டு வெட்கமில்லாமல் வெளியிட்டிருக்கிறது. மதத்தால் ஏற்பட்ட-ஏற்படுகிற கேடுகளை உணராதவர் அல்ல ஆச்சாரியார். உலக வரலாறு படித்தவர் அறியாமல் செய்வது தவறு-மன்னிக்கலாம்-குற்றம் உணர்ந்து-செய்வது-இதை எப்படி மன்னிக்க முடியும்.

'உவாங்டி' என்ற சீன மன்னன் பழமையை வளர்ப்பவர்களை உயிரோடு புதைப்பேன் என்ருனும். அன்பர் ஆச்சாரியார் அவன் கையில் சிக்கி இருந்தால் என்ன செய்திருப்பானே நாம் அறியோம். பட்ட

சாதி வளர்த்து சதுர்மறையால் தீ வளர்த்த வேதியரோ, வீணுசை !

...ன்று தடை செய்யும், பழமை ...ளர்க்கும் மதத்தால் விளையும் ...டுகளை விளக்கினர். சித்தர்கால ...தல் இன்றளவும் மதத்தை ...திர்த்து தீட்டப்பட்ட ஏடுகள்-...டுத்து விளக்கிய மேடைகள் ஆயி...ம் ஆயிரம் ! நச்சுக் கிண்ணத்தை ...தட்டின் விளிம்பில்வைத்தபடியே ...தம் ஒழிய வேண்டும் என்று ...றிய நெஞ்சுரம்கொண்டோர்கள்-...ருண்ட குகையில் என்னைத் ...ள்ளினும் இருக்கவிடமாட்டேன் ...தவெறியை என்று முழக்கமிட்ட ...ன்மையாளர்கள் - உயிரோடு ...ன்னைக் கொளுத்தினுலும் கால ...வெள்ளம் மதத்தை தூக்கி எறியா...ல் போகாது என்றுரைத்த வன்...நெஞ்சர்கள், சிறைச்சாலையும் சித்ர...தையும் பரிசாகக் கிடைப்பினும் ...த்தின் எதிரி நான் என்று உரத்...குரல் எழுப்பிய உத்தமர்கள் ...வனியின் பரப்பிலே ஏராளம் ! ...ராளம் !

...அறிவுடையோர் ; அதை நெறி...றுது பயன் படுத்துகின்ற முறை தாழ்வில்லை' 'சங்கானை துதித்தாடு; இனி சனனமில்லை எனப்பாடு ! 'தில்லை வெளியிலே கலந்துவிட்டால் அவர் திரும்பி வருவாரோ ? 'பெண்டு பிள்ளைகள் வெறுங்கூட்டம் அது பேய்ச்சுரக்காய்த்தோட்டம்! என்பனபோன்ற பித்தலாட்டக் கருத்துக்களை - ஆண்டு அலுத்த கிழங்களிலிருந்து - பகலெல்லாம் பஜனை மடம் - பகல் செத்ததும் 'கேர் ஆப் பிளாட்பாரங்'களில் பெண் வேட்டை நடத்தும் போலிச் சாமிகள் வரை செத்துக்கொண்டிருக்கும் மதத்திற்கு புத்துயிர் அளிக்கின்ற 'திருப்பணி'யில் இறங்கி விடுகின்றனர்.

திரு ஓடு எடுத்து தெருவோடு செல்லும் பரதேசிகளைப் பற்றி கவலைப்படவில்லை நாம். படித்திருப்பதாகவும்-அறிவுலகை அறிந்திருப்பதாகவும் கூறிக்கொள்ளும் ஒருசில 'அதிமேதாவி' களும் - சமுதாய முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டைகளாகி வருகின்றனரே என்பதை எண்ணினுல் நெஞ்சம் குழம்பு களில் அல்ல ! இளைப்பொருள் இத்தனையும் உள்ளடக்கி ஒரே வரியில் 'ரத்தினச் சுருக்கமாக'!

பல மதங்கள் இருப்பதால்தான் நாடு நந்தவனம் போல் காட்சி தருகிறது.ஒரு மதம் கூட வேண்டாமாம்! பல மதங்கள் வேண்டுமாம். வெட்கக்கேடு ; ஆச்சாரியார் பேசி இருக்கிருர். அதுவும் இந்த இருபதாம் நூற்ருண்டில்; மக்கள் மத்தியிலா-அல்ல-அல்ல - மார்வாடிகள் புடைசூழ்ந்திருக்கும்போது இந்த அரிய கருத்தைச்சொல்லிஇருக்கிருர்.மதம் ஒரு தொத்து நோய். இது அறிஞர்கள் வாக்கு-அந்த மதம் ஒன்றல்ல-பலவாக இருக்க வேண்டும் இது ஆச்சாரியாரின் பேச்சு ?

மனித சமுதாயத்தில் அந்த பெரும் நோய் புகவொட்டாமலும் புகுந்ததை வளர ஒட்டாமலும் தடுக்கவேண்டும்-நல்லறிஞர் அனைவரும் இதனை முழுக்க முழுக்க ஒப்புக் கொள்கின்றனர்.

ஒரு நோய் மட்டுமா - சே! சே! கூடாது காலராவில் கொஞ்சம் பேர் மரத்தில் துளிர் காண முடியாது என்பதைப்போல் ஆச்சாரியாரின் பேச்சிலும் புதுமை காணமுடியாது என்பது உண்மை ; ஒப்புக்கொள்ளலாம். ஆனல் அவரின் வரம்பு கடந்த 'தலைக்கனம்' இந்நாட்டுப் பெருங்குடியினரை துச்சமென மதித்துப் பேசும் செருக்கு-நாளுக்கு நாள் ஆச்சாரியாரிடம் வளர்ந்து வருகிறது. அவர் பேசி இருக்கும் ஆணவப்பேச்சு...தமிழர்களுக்கெல்லாம் பெரும் சோதனை. எங்கு முடியுமோ - இருமாப்பின் எல்லை...என்றுமுடியுமோ...காலந்தான் சொல்ல வேண்டும்

'மதநம்பிக்கை அற்றவர்களுக்கு இடமில்லை இனிமேல்'

" எங்கு ? "

" தென்னுட்டில் "

" பேசிய இடம் "

'சென்னை சௌகார்பேட்டை'

" திரும்பினுரு...! "

'தமிழ்நாடு என்பதால் திரும்பி இருக்கிருர்'

...லோ' யாரது ? மனநோய் வைத்தியரா ? விரைவில் தி. நகருக்கு வரும்!

'இதைச் சொல்ல இவர் யார்?

'ஆச்சாரியார்'

'எங்கிருந்தோ வந்த இவருக்கு உரிமை என்ன இருக்கிறது'

இதைத்தான் நாடு கேட்கிறது—நாமும் கேட்கிறோம்; செத்துப்போன சர்வாதிகாரி எவனாவது பிழைத்தெழுந்தால் கூட கூறியிருக்கமாட்டான் இப்படி!

எங்கு இடமில்லை! யாருக்கு இடமில்லை! நினைத்தால் சிரிப்பு வெடிக்கிறது; மதச்சார்பற்ற சர்க்கார் இது அதிலே ஒரு பொறுப்புள்ள 'பெரிய மனிதரின்' பேச்சு; எப்படி இருக்கிறது; அதுவும் தென்னாட்டவருக்குத் தென்னாட்டில் இடமில்லையாமே! ஐயோ! அவமானம்; சுயமரியாதை ரத்தத்தை சூடேற்றுகிறது ஆணவப்பேச்சு! என்னென்பது?

"வந்துவிட்டானே வெளியூரிலிருந்து ஒருவேளை தண்டச் சோறுவது போட்டனுப்புவோம் என்று எண்ணி இருக்கும் வீட்டுக்குரியவனைப் பார்த்து—உன் போக்கு எனக்குப் பிடிக்கவில்லை அதனால் இனி உனக்கு வீட்டில் இடமில்லை—என்று எவனாவது கூறினால் அந்த தண்டச் சோற்றுக்காரனை வீட்டுக்குரியவன் நிச்சயம் கைகளால் அடிக்கமாட்டான்— கம்பொன்றின் துணைகொண்டு ஓட ஓட விரட்டியிருப்பான்;" நியாயமும் அதுதானே? ஆனால்,

வந்தவன் நிலையிலே ஆச்சாரியார்; வீட்டுக்குச் சொந்தக்காரன் நிலையிலே நாம்; என்றாலும் நிலைமை தலைகீழ்ப் பாடமாக இருக்கிறது.

'எங்கிருந்து வந்தனர் என் முன்னோர்கள் என்பது ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்' அந்தப் 'பெரும் பேரறிஞரின்' அடுத்த வாக்கியங்கள் இவை; இந்த வரியில்தான் 'சாணக்கியம்' கலந்து விடப்பட்டிருக்கிறது.

'ஆண்டவனுக்குத்தான் வெளிச்சமாம்! கன்னக்கோலுடன் நள்ளிரவில் திரிபவனும்-கணவன் தூங்கிய பிறகுகொல்லைவழிபுகுந்து கள்ளக் காதலனுடன் குலவும் சோரம் போனவளும் கூடத்தான் பிடிபட்டால்—ஒருபாவமும் அறியாதவள்-ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம் அபாண்டமாக பழிசுமத்தாதீர்கள்-அடுக்காது இது-என்று எதற்கெடுத்தாலும் ஆண்டவனை துணைக்கழைப்பார்கள். அதைப்போல ஆச்சாரியும் உலகமறிந்த உண்மையை ஆரியர்களான ஆச்சாரியின் முன்னோர்கள் நடு ஆசியாவிலிருந்து ஓடிவந்தவர்கள்—என்ற வரலாறு சொல்லும் உண்மையை—ஆண்டவன் திரையிட்டு மூடப்பார்க்கிறார். கொஞ்சும் கிளிக்கூட்டம்—குலவுகின்ற சோலையில் வந்து புகுந்த ஆரியம்—அன்று நம்மை வீழ்த்த விரித்த வஞ்சக வலைகள்—தீட்டிய புடலங்காய் புராணங்கள்—சூழ்ச்சிகள் நிறைந்த அதர்வண வேதங்கள்- இத்தனையும் ஆரியத்தின் கைச்சரக்கு; கடைமுடி—கணக்கை முடித்துக்கொள்ள வேண்டிய கட்டம்நெருங்கிவிட்டதேஎன்ற நடுக்கம் அலைமோதும் பெரும் பயம்—ஆரியம் அழிந்து வருகிறது என்ற கிலி; பழமைக் கோட்டை—பலகாலம் அரும்பாடுபட்டுக் காத்து வந்த வர்ணாசிரம தர்மம்—தவிடுபொடியாகிறதே என்ற கலக்கம் ஆச்சாரியின் இதயத்தில் குடியேறி விட்டிருக்கிறது; அந்த அதிர்ச்சியின் விளைவே வரம்பில்லாமல்—வரப்போகும் விளைவினை—எண்ணிப் பாராமல் ஏதேதோ உளறிக்கொண்டிருக்கிறார். பருவ முதிர்ச்சி ஒரு புறம்; பயம் மறு புறம்; நம் வளர்ச்சியும்—கிளர்ச்சியும் வேறு புறம். அவருந்தான் பாவம் என்ன செய்வார்; அணையப் போகும் விளக்கு...!

★

பிறந்த மண்ணில் இருந்திட நமக்கு—இடமில்லையாம்...எவ்வளவு நெஞ்சுரம்...துணிவு இருக்க வேண்டும் இதைக்கூறிட? இதே முறையில் மதப் பற்றுள்ளவர்களுக்கு இனி இந்த நாட்டில் இடமில்லை என்று நாம் கூறவில்லை, கூறி இருந்தால் அதே 'தினமணி' பாருங்கள்! பாருங்கள்; மக்களைத் தூண்டிவிடுகிறார்கள் — வகுப்புத் துவேஷம் — வளரவிடக்கூடாது — என்று நிச்சயம் எழுதியிருக்கும்; ஜனநாயக நாடாம் இது—எண்ண எழுத-எடுத்துச் சொல்ல-ஏற்ற மதமெனில் பின்பற்ற—பின்பற்றாமல் இருக்க இத்தனை உரிமைகளும்—தனி மனித உரிமைகள்—சட்டம் இடந்தருகிறது;

ஆனால் இந்த மதவெறியர் கூறுகிறார்—'இடமில்லையாம்' இருக்க விடமாட்டாராம்! வெட்கம்! வெட்கம்! வெளிநாட்டார் இதைக்கேட்டால் விலா வெடிக்கச் சிரிப்பார்கள்! இவ்வளவு கொடிய வார்த்தைகளைத் தாங்கும் அளவிற்கும் தென்னகத்தில் மக்கள் இருக்கிறார்களா? என்று வியப்பு மேலிடுவர்; ஆனால் ஆச்சாரியாரின்—'வெறிப் பேச்சுக்கள்' எல்லை மீறி ஓடிக்கொண்டிருக்கிறது. அமைதியாக இருந்து வரும் சமுதாயத்தில் இனி ஏதாவது மதச்சம்மந்தமான கிளர்ச்சிகள் எழுமானால்—முதல் குற்றவாளி ஆச்சாரியாராகத் தான் இருக்க முடியும். அந்த அளவிற்கு பொறுப்பை மறந்து—எங்கு வாழ்கிறோம் என்பதை மறந்து பிளவுகளை வளர்த்து விடும்திருப்பணியில்ஈடுபட்டுள்ளார். பலவேடங்களோடு நின்றால்—தோழர் ஜீவானந்தம் வரிசையில் வைத்து எண்ணலாம்; சாணக்கியமாம்—ஆரியத்தின் பண்டை நாள் சூழ்ச்சி முறையில் போர்க்கோலம் பூண்டிருக்கிறார்; தெளிந்து வரும் சமுதாயத்தில் சாக்கடைக் கருத்துக்களை வாரி இறைக்கிறார்; ஆனாலும் பிப்பா விருந்தாளிதான்—என்றாலும் குரலிலே அதிகாரம் தொனிக்கிறது!

ஆரிய மாயை! அதைச் சுற்றிலும் வால் குழைத்து வாழும் அசல் தமிழர்கள்! சமுதாய விரோதிகள்—மாணிக்க வேலர்கள்—ராமசாமிகள் — சிவஞானங்கள்—ஜீவானந்தங்கள் தொலைந்து பெற்று—தூக்கம் தெளியாதவரையில் — நிலைமை மாற்றம் காண்பதற்கு தாமதம் ஏற்படலாம் — என்றாலும் தடையாகி விடாது!

ஆச்சாரியார் கிளப்பிவிடும் மதச் சண்டையில் — 'மாம்பலமோ' 'மயிலாப்பூரோ' பங்கேற்காது. மாறாக உடையப் போகும் தலைகள் நம் தலைகள் — தூண்டிவிடும் 'தூயவர்' எங்காவது ஒரு மூலையில் புகுந்துகொள்வார்; இந்தக் கொடுமை நீண்ட நாள் வாழமுடியாது; விடி வெள்ளி முளைத்துவிட்டது; இருள் நிச்சயம் விலகத்தான் போகிறது! ஆர்த்தெழும் புதுமை வெள்ளத்திற்கு—ஆச்சாரியாரால் அணைபோட முடியாது; ஆரியக் கோட்டை நம் ஆவேச மூச்சில்—தெருப்புழுதி; மிகையல்ல இது—பாதை மாறிவிட்டால்—ஆரியம் மாற்றிக் கொள்ளா விட்டால்; காணப்போகும் காட்சி! இடமில்லையாம்! யாருக்கு இடமில்லை! காலம் பதில் கூறும்! நாம் பார்க்கத்தான் போகிறோம், காலம் ஓடிக்கொண்டிருக்கிறது—அந்த நாள் விரைவில் வரப்போகிறது—வெகு தூரத்தில் இல்லை.

— வில்வம் —

அச்சம் அற்றது வாழ்வு!

கண்ணதாசன்

★

"அச்சத்தை நீக்" கென்னும் சொற்கள் சின்ன
அறிவறியாக் குழந்தைக்கு மட்டுமல்ல;
"இச்" சென்னும் மரப்பல்லி ஓசை கேட்டு
இடுப்பொடியும் முதியோர்க்கும் சொன்ன சொல்லாம்!

அச்சத்தின் கையணைவில் வாழ்ந்து தேய்ந்து
அறிவென்னும் பொருள் கெட்ட மாந்தர், வாழ்க்கை
உச்சத்தை அடைந்ததில்லை என்ப திந்த
உலகத்து வரலாறு காட்டும் பாடம்!

நமைப்பற்றி உலகென்ன சொல்லும்? அந்நாள்
நடை முறையை மீறி நாம் செல்ல லாமா?
இமை கொட்டா திருப்போர் நம் புதுமை கண்டால்
இழிப்பார்கள் --- பழிப்பார்கள் --- ஏசுவார்கள்"

என்றெண்ணிப் பழம் பாதைப் பயணம் போவார்
இருப்பதிலும் சாவதுதான் மேலாம் என்பேன்!
நன்றென்பார் என்கருத்தை அறிவுள் ளோர்கள்
நாயென்பார் மதியிழந்தோர்! கவலை இல்லை!

போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும் தொடர்ந்து செல்வேன்!
ஏற்றதொரு கருத்தை என துள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் எவர் வரினும்நில்லேன்; அஞ்சேன்

சாக்காடே எதிர்நோக்கி வருவ தேனும்
சதிகாரர் சூழ்ச்சியெனை வதைக்கு மேனும்
தேக்காதென் தனிப்போக்கு! மேலும் மேலும்
திடம்படுமே யல்லாது குறையா தென்பேன்!

ஆயிரமாய்த் தொல்லைகளை வாழ்விற் கண்டேன்
அடுக்கடுக்காய் இன்னல்களை அணைத்தும் நின்றேன்
ஆயினுமென்? அச்சத்தால் உயிர்விட்டேனா?
ஆகட்டும் பார்ப்போம் என்றெதிர்த்துச் சென்றேன்.

அச்சத்தை நீக்கியதால் உயிர்வாழ் கின்றேன்
ஆனந்தம் தோள்தழுவப் பூரிக் கின்றேன்
மிச்சத்தைப் பின்சொல்வேன்! ஒன்றே யொன்று;
வேஷத்தை மோசத்தை எதிர்த்தே நில்லு!

★

புரியாத விஷயம்!

ஜெர்மானிய மொழி தெரியாத பிரஞ்சு அதிகாரி ஒருவர் ஜெர்மனியில் இருக்கும் ஒரு ஓட்டலுக்கு சென்றார். அந்த ஓட்டலில் எல்லாம் பெண் 'சர்வர்'கள் தான்! பிரஞ்சு அதிகாரி உட்கார்ந்திருந்த மேஜைக்கு ஒரு பெண் 'சர்வர்' வந்தாள். அவளுக்கு பிரஞ்சுமொழி தெரியாது. பிரஞ்சு அதிகாரி பிரஞ்சுமொழியில் எதையோ கேட்டார். அவள் வேக வைத்த கோழிக்கால் இறைச்சி கொண்டு வந்து வைத்தாள். அதிகாரி விரும்பியதோ கோழியின் மார்பு இறைச்சி! எப்படி விளக்குவதென்றே தெரியவில்லை அந்த அதிகாரிக்கு. இரண்டு கைகளையும் தன் மார்பின் மேல் வைத்து 'சைகை' காட்டினார்; என்ன புரிந்து கொண்டாளோ பாவம் அந்தப் பெண் 'சர்வர்', மெள்ள சிரித்தபடியே தலையை அசைத்து விட்டு உள்ளே சென்றவள் சில விநாடிகள் கழித்து இரண்டு கோப்பை நிறையப் 'பால்' கொண்டு வந்து வைத்தாள்.

அந்த பிரஞ்சு அதிகாரி ஒன்றும் புரியாமல் திருதிருவென்று விழித்தார்.

—ரீடர்ஸ் டைஜஸ்ட்

எண்ணம்

கண்ணதாசன்

தமிழரது தலைப்பெரும் நூல் திருக்குறள். உலகத்திலுள்ள படிப்பகங்கள் அனைத்திலும், இடம் பெற்றிருந்து, தமிழருக்குப் பெருமை நல்கும் நூல், திருக்குறள். மற்ற நாட்டார், தங்கள் மறைக்கு அடுத்தபடியாக அதனை வைத்துப் பெருமைப்படுகின்றனர்.

தென்னாடு சமீப காலத்தில் திருக்குறளைத் 'தலையில் தூக்கி வைத்து' மகிழ்கிறது. சாதி, மத, கட்சி பேதங்களைக் கடந்த பாராட்டு அதற்குக் கிடைக்கிறது. இவ்வளவு சிறப்பும் பெற்ற குறளை ஒழுங்காகப் பதிப்பிக்கவேண்டிய அவசியம் பற்றி எல்லோரும் அறிந்துள்ளனர்.

பரிமேலழகர், மணக்குடவர் உரைகளுக்குப் பின்னர், பல ஆசிரியர்கள் குறளுக்கு உரை எழுதியுள்ளனர். சிலர் பரிமேலழகரை அப்படியே பின்பற்றி, சொற்களை மட்டும் கொஞ்சம் மாற்றிக்கொண்டும், சிலர், மணக்குடவரை அப்படியே பின்பற்றியும் உரை எழுதியுள்ளனர். எல்லாம் ஒரே முறையாக அமைந்துள்ளதே யன்றி, பகுத்தறிவோடு சிந்திக்கும் பல லட்சம் தமிழர்களுக்கு மகிழ்ச்சி தருவதாயில்லை. வாழ்க்கைக்கு நூல் வடித்த வள்ளுவன், இயற்கை நிலைக்குப் புறம்பான கருத்துக்களையும் அதீதக் கற்பனைகளையும் அதில் கலந்திருப்பானா என்று யாரும் ஐயப்படாமல், உரை வடித்துள்ளனர். வாழ்க்கைக் குறள்கள் வள்ளுவனாலும், அதனின்று மாறுபட்ட சில குறள்கள் இடையில் சேர்க்கப்பட்டவையாகவும் இருக்கவேண்டுமென்றும், சில குறள்களுக்கு உள்ள உரைகள், உண்மை உரைக்கு மாறுபட்டவை என்றும் பலர், பலகாலமாகக் கூறி வந்துள்ளனர். மாறுபட்ட உரை பரிமேலழகர் உரை என்று சில குறள்களை உதாரணம் கூறும்போது, 'அகரமுதல; 'ஆபயன் குன்றும்' முதலிய குறள்கள் கூறப்படுகின்றன. இன்னும் சில நேரிய குறள்களுக்கும் பரிமேலழகர் 'தெய்வீக மெருகு' கொடுத்துள்ளார். இவற்றை வைத்து உண்மைப் பொருள் காணவேண்டியதும், 'இடைச் செருகல்'களை நீக்கவேண்டியதும் அவசியமாகிறது. என்றென்றும் அழியமுடியாத 'திருக்குறள்' போன்ற நூற்களுக்கு இந்த 'வைத்தியம்' நிச்சயமாகத் தேவைப்படுகிறது. வ. உ. சிதம்பரனார் கருத்தும்படி, முதல் மூன்று அதிகாரங்களும் வள்ளுவன் செய்ததல்ல என்று கொள்ளலாம். மற்றக் குறள்களோடு ஒப்பிடுகையில் இந்த மூன்று அதிகாரங்களில் பல பாடல்கள் பரிதாபகரமாக, தனியே நிற்பதிலிருந்து, ஏதோ இது இடையில் நடந்த வேலையாகத்தான் இருக்க வேண்டும் என்று யூகிப்பதில் நியாயம் இருக்கிறது. உதாரணமாக

" ஐந்தவித்தான் ஆற்றல்—
அகல்விசும்புளார் கோமான்
இந்திரனே சாலும் கரி "

என்னும் குறள்,

" ஐந்து புலன்களால் வரும் ஆசையை அடக்கியவனுடைய வல்லமைக்கு வானுலக இந்திரனே சான்று " என்னும் பொருளோடு இயங்கி வருகிறது. (காமக்கடலில் ஆயிரம் புண் பெற்றான் எனக் கூறப்படும் இந்திரன், இதிலே புலனடக்கத்துக்கு உவமிக்கப்படுகிறான்!) இந்தக் குறள் முழுக்க மாறுபட்டு நிற்கிறது. இதுபோலப் பலகாட்ட முடியும். ஒரு குறளுக்கு மறு குறள் முரண்படுவதையும் எடுத்துக்காட்ட முடியும்.

இத்தகைய குறள்கள் வள்ளுவனால் செய்யப்பட்டவையே என முடிபு கட்டவோ, இல்லை எனத் தீர்மானிக்கவோ, வரலாற்றுச் சான்று இல்லையேனும் குறட்பாக்களை வைத்தே ஆராய்வதன் மூலம் கண்டுபிடிக்க முடியும்.

அப்படிப்பட்ட பயனற்ற கருத்துக்கொண்ட பாக்களை தைரியமாக நீக்கிவிட்டு ஒரு 'திருக்குறள் பதிப்பு' வெளிவரவேண்டும்,

வள்ளுவன், பாக்களை அதிகாரம் பிரித்துக்கொண்டு பத்துப் பத்தாக எழுதினான் என்பதே தவறு என்றும், மொத்தமாக வள்ளுவன் பாடியவற்றை, பின்னாளில் வந்தவன் அதிகாரம் பிரித்துள்ளான் எனவும், அதனால் ஒரே கருத்து இரண்டு அதிகாரத்தில் வருகிறது எனவும், நாவலர் இரா. நெடுஞ்செழியனார் ஒருமுறைகூறினார். இது முழுக்க உண்மையாகக்கூடிய ஆராய்ச்சி என்று கொள்ளலாம். அப்படிப் பார்த்தால், அதிகாரம் பிரித்தவனோ அதற்குப் பிற்பட்டவனோ முற்பட்டவனோ ஏன் இடைச் செருகல் செய்திருக்க முடியாது? துணிந்து 'திருத்தம் பெற்ற திருக்குறள் பதிப்பு' ஒன்று வெளியிடாக வேண்டும். அது நீடித்து நிலைக்க வழி செய்ய வேண்டும். தமிழ்ப்புலவர்கள் இதைச் செய்ய வேண்டும். வெறும், நயம், பாவம் உருக்கம்' என்றெல்லாம் நடிப்பதைக் காட்டிலும், இனப்பண்புக்கு ஏற்ற இந்தக் காரியத்தைப் புலவர்கள் செய்வதானால் அறிவுள்ள மக்கள் அனைவரும் ஆதரிப்பர்.

நவம்பர் 27உ முதல்
கண்ணதாசன் எழுதும்
'ஆயிரம் தீவு அங்கயற்கண்ணி'
(சரித்திரத் தொடர்கதை)
"தென்றல்" இதழில் ஆரம்பமாகிறது.

சங்ககாலத்தில் 'மணவினைத் தாலி' கிடையவே கிடையாது!

ஔவைப்பிள்ளை உறுதியாகக் கூறுகிறார் :

தோழர் சிவஞானம், சமீபத்தில் 'தென்றல்' வெளியிட்ட கட்டுரையை எதிர்த்து ஒரு இதழில் எழுதியுள்ளார். அதில், சங்க இலக்கியத்தில் தாலி உண்டு என்று சொல்பவர்களில், 'சிலப்பதிகாரச் சுருக்கம்' எழுதிய, புலவர் ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை அவர்களையும் சேர்த்துத் தனக்கு ஆதாரமாக்கி இருந்தார். இது பற்றி, 8-11-54 உயன்று மதுரை தியாகராயர், கல்லூரியில் கண்ணதாசன் கேட்டபோது அவர் சொன்னது இதுதான் :—

" திருவாளர் ம. பொ. சி., நான் எழுதிய நூலின் முன்னுரையைப் படிக்காமல் எழுதிவிட்டார். அவர், பாவம்! முன்னுரையைப் படித்திருந்தால் தெரிந்திருக்கும். அதில் நான் சொல்லியுள்ளேன், என் சொந்தக் கருத்து இதுவல்லவென்றும், பழைய உரையையே தந்துள்ளேன் என்றும் கூறியிருக்கிறேன். உண்மையைச் சொல்லப்போனால், **கி. பி. 10-ம் நூற்றாண்டு வரையிலும் தமிழரிடையே தாலி கட்டும் பழக்கம் இருந்ததற்கு ஆதாரம் கிடையாது.** *உரையாசிரியர்களெல்லாம், மிகவும் பிற்பட்ட காலத்தவர்கள். அவர்களுடைய கருத்தை மூல ஆசிரியனின் கருத்தாகக் கொள்ள முடியாது. 'மங்கல அணி' போன்ற பதங்களெல்லாம் தாலியைத்தான் குறிக்கின்றன என்று எப்படி உறுதியாகக் கூறமுடியும்? சங்ககாலத் தாலியெல்லாம் குறச்சிறுவர்களுக்கு அணியப்படும் தாலியே தவிர, மணவினைத் தாலி அல்லவே அல்ல! மணவினைத் தாலி, பத்தாம் நூற்றாண்டுவரை கிடையவே கிடையாது என்று உறுதியாகக் கூறலாம்."*

வெல்ஸ் திருடினார்!

எச். ஜி. வெல்ஸ் என்ற பிரபல ஆங்கில எழுத்தாளருக்குத் தலை ரொம்பப் பெரிசு. தமது தலைக்கேற்ற தொப்பி கிடைக்காமல் வெகு காலமாக அவர் கஷ்டப் பட்டுக் கொண்டிருந்தாரம்.

சிறிது காலத்துக்கு முன் அமெரிக்காவில் ஒரு பெரிய தொப்பியை அவர் கண்டார். உடனே அதைக் கையிலே எடுத்துக் கொண்டு கிளம்பி விட்டார். அந்தத் தொப்பி, மெசாசெட்சிலுள்ள கேம் பிரிட்ஜ் மேயர் பெக் என்பவருடையது. ஆகையால், கொஞ்சமும் கூசாமல், பெக் அவர்களுக்கு ஆசிரியர் வெல்ஸ் பின்வருமாறு ஒரு கடிதம் எழுதினார் :

" தங்கள் தொப்பியை நான் திருடி விட்டேன். அது எனக்கு ரொம்பப் பிடிக்கிறது. அதை நான் வைத்திருப்பேன். அதற்குள்ளே நான் பார்க்கும்போதெல்லாம், எனக்கு உங்கள் நினைவும் நீங்கள் அளித்த ஷெர்ரி பானத்தின் ஞாபகமும் கேம் பிரிட்ஜ நகர நினைவும் வரும். கேம் பிரிட்ஜ் கல்லூரியை விட, 'கேம் பிரிட்ஜ் நகரம் பழமையான தல்லவா? உங்கள் தொப்பியைத் தூக்கி உங்களுக்கு இதோ வணக்கம் செலுத்துகிறேன்."

மத பக்தி

ஜீவ இம்சையே கூடாது என்று புத்தர் பெருமான் சொல்லியிருக்கிறார். புத்த மதத்தில் மிகுந்த நம்பிக்கையுடைய ஒரு பர்மாக்காரனுக்கு மீன் பிடிப்பதில் ரொம்ப ஆசை. ஆகையால் அவன் ஒரு யுக்தி செய்தான். ஒரு மரக்கட்டையை எடுத்தான். வெள்ளை வேளேர் என்று அதற்கு வர்ணம் பூசினான். அதன் பின் அதை ஆற்றிலே தண்ணீரில் கரையோரமாய்ப் போட்டான், மீன்கள் அதைக் கண்டு, என்னவோ ஏதோ வென்று பயந்து துள்ளி மணலில் வந்து விழுந்து மாண்டன. அந்த மீன்களைப் பொறுக்கிப் பொறுக்கிப் பையிலே நிறைத்துக் கொண்டான் அந்தப் பர்மியன்.

"இப்படி கொலை செய்யலாமா?" என்று அவனை ஒரு நண்பர் கேட்டார்.

" நான் எங்கே கொலை செய்கிறேன்? அவை தற்கொலை செய்து கொள்கின்றன. அப்படித் தற்கொலை செய்து கொள்பவற்றை நான் பொறுக்கிக் கொள்கிறேன். இவ்வளவுதானே" என்று அவன் பதிலிறுத்தான்!

சந்தேகம்!

பெண் ஒருத்தி மிருகக் காட்சிசாலையைப் பார்க்கச் சென்றாள். பல மிருகங்களையும் பார்த்துவிட்டு கடைசியில் வாலில்லாக் குரங்குகள் வைக்கப்பட்டிருந்த இடத்திற்கு வந்தாள். அங்கு ஒரு குரங்கைப் பார்த்ததும் அந்தக் குரங்கு ஆணா? பெண்ணா? என்ற சந்தேகம் கிளம்பிவிட்டது.

உடனே அங்கிருந்த காவல்காரனைப் பார்த்து! ஐயா இந்த வாலில்லாக் குரங்கு ஆணா? பெண்ணா? என்று நயத்தோடு கேட்டாள்.

அந்தக் காவல்காரன் சட்டென்று 'அம்மையே! இந்த சந்தேகம் வேறொரு குரங்கிற்கல்லவா ஏற்பட்டிருக்க வேண்டும்' என்று நிதானமாக பதில் சொன்னான்.

(ரீடர்ஸ்—டைஜஸ்ட்.

பெரும் பயணம்

கண்ணதாசன்

1939, ஜூன் 7

சென்னையினில் வேலூரில் திருச்சிதன்னில்
செழுங்கொங்குக் கோவையினில் ஆந்திரத்தில்
இன்னும் இவண் சிறைக்கோட்டத்துள்ளிருந்த
எழிற் 'காஞ்சி பாவஸ்து' எஸ். சம்பந்தும்
தென்னமுதன் பேரியகுளம் ரங்கசாமி
சீராளன் டி. எ. வி. நாதன் மற்றும்
அன்னையரில் சில பேரும், இந்த நாளில்
அவதியுறும் சிறை நீங்கி வெளியில் வந்தார்.

வரவேற்பு ! நாடெங்கும் வீரவாழ்த்து !
வழிகாட்டும் தலைவோர்க்குப் பாவில் மாலை !
அரசோச்சும் கருநாகம் இதனைப்பார்த்து
அலைபாயும் ; இரவெல்லாம் தூக்கம் நீங்கும் !
திருநாடாம் தென்னாடு எவர்க்குச் சொந்தம் ?
தெரியாதார் அந்நேரம் தெரிந்தார் ! " அன்பு
தருநாடே ! நீ வாழ்க ! உனது சேய்கள்
தளராத நெஞ்சத்தார் ! வீரர் !" என்றார் !

சேர இறை வடநாட்டுச் செலவும், பாண்டித்
தீரரெலாம் செயங்கொண்ட முறையும், சோழ
சூரர்களின் கலிங்கத்துப்போரும் இந்தத்
தாயவரின் போருக்கு நிகராம் என்பேன் !
தாரணியும் பழக்கங்கள் மறைந்தும், நாடு
தானணிந்த மாலையெலாம் தாராய்த் தோன்றும் !
ஊறிவரும் உணர்வோடு புசித்தலின்றி
உழைத்தோரை இந்நாட்டார் மதித்தார் ! வாழ்க !

1939 ஜூன் 18

சென்னை நகர் பெரியாரின் வரவை நோக்கி
தீராத ஆசையொடும் இருந்த காலை
இந்நாளில் அவர் அங்குப் போந்தார் ! எள்ளுக்(கு)
இடமில்லை எனுமாறு கூட்டம் கூடும் !
வண்ணாரப்பேட்டை முத்தியாலுப்பேட்டை
வளர் தங்கசாலை ஒற்றவாடை மற்றும்
திண்ணார்ந்த நெஞ்சினரின் பெரம்பூர், ஏழைச்
சிந்தாதிரிப்பேட்டை புரசவாக்கம்

அனைத்திருந்தும் தென்னாட்டார் போந்தார் ; அன்று
ஆட்கடலே புகைவண்டி நிலையம் முற்றும் !
நினைத்திருக்கமாட்டார்கள் பகைவர் ! ஆகா !
நீணிலமே நாம் என்னும் நிலைமை தோன்றும் !
தனிப்பெருமை கொண்டாயே தமிழா ! அன்று
தலைவர்க்கு நீதந்த வரவேற்பாலே !
உனைப்புகழ ஒரு வார்த்தை இலையே ! இந்த
உலகத்து மொழியாவும் தேடிப்பார்த்தும் !

செட்டி நாட்டிளவரசர் முத்தையாவும்
திருச்சி நகர்க் கி. ஆ. பெ. விசுவநாதம்
பட்டுக்கோட்டை வீரன் அஞ்சாநெஞ்சன்
பகைவாட்டும் அழகிரியும் பெரியார் தம்மைக்
கட்டுமலர் மாலைக்குள் மூழ்கவைத்தார் !
கைதட்டிப் பொதுமக்கள் வரவு சொன்னார் !
திட்டமுடன் செயலாற்றும் அண்ணாவோடு
சென்னையிலே வலம் வந்தார் பெரியார் அன்று !

தலைவருடன் தளபதியை ஒன்றாய்க்கண்ட
தமிழ்நாட்டார் மகிழ்ச்சியினைச் சொல்லப்போமோ !
" சிலைமேனிப்பெரியார்க்கு வாய்த்த கையில்
செயலாற்றும் பெருங்கையாம் அறிஞர் அண்ணா !
நிலையான இருகைகள் உடம்பில் உண்டு
நிகரில்லை இக்கைக்கு அவற்றில் ஏதும் !"
அலையாக வருங்கூட்டம் இதனை எண்ணி
ஆனந்தக் கண்ணீரைச் சொரியும் ஆங்கே !

(தொடரும்)

தாலிகட்டும் வழக்கமே...
பழந்தமிழ் நாட்டில் இல்லை !

" துணிந்து கூறலாம்" மதுரை முதலியாரின் உறுதியான முடிபு !

கற்பிற் சிறந்த கண்ணகியை, ஆண்டகையாகிய கோவலன் மணக்குங்கால்,

'சாலியொரு மீன் தகையாளைக் கோவலன்
மாமுது பார்ப்பான் மறைவழிகாட்டிடத்
தீவலஞ் செய்வது......'

என்றுதான் கூறப்பட்டுள்ளதே யன்றி, மங்கல நாணைப் பற்றிய ஒருவித குறிப்பும் இல்லை. இதிலிருந்து, அக்காலத்தில், தமிழர், மங்கல நாணை, மங்கையர் கழுத்தில் கட்டும் வழக்கம் இல்லையெனத் துணிந்து கூறலாம். ஆனால் மண வினைக்கு முன்னர், 'முரசியம்பின......' என்னும் வரித் தொடரில், 'அகலுள் மங்கல அணி எழுந்தது' என்பதற்கு ; அரும்பத உரையாசிரியர், " ஊரிலே மாங்கல்ய சூத்திரம் வலஞ்செய்தது" என்று எழுதியுள்ளார். இது பொருந்தா உரை என்பது, 'கட்டுரை காதை'யால் தெரிகிறது. அக்காதையில், கண்ணகி, வளையுடைத்த குறிப்புளதேயன்றி, மங்கல நாணைக்காணோம். இதுவும் பிறவும், பழந்தமிழர் தாலிகட்டுவதில்லை என்பதை உறுதிப்படுத்துகின்றன !"

—புலவர் கு. மதுரை முதலியார்.

தாலி இல்லை !

பன்மொழிப்புலவர்
அப்பாத்துரையும் கூறுகிறார்.

" சங்க காலத்துத் தாலியெல்லாம், குறச்சிறுவர்கள் அணியும் தாலியே தவிர, 'மணவினைத்தாலி' அல்லவே அல்ல. சங்க இலக்கியத்துக்கு உரை எழுதியவர்கள் தங்கள் கருத்துக்களையே பெரிதும் பிரதிபலிக்கிறார்கள். இதற்கு மூல ஆசிரியன் கட்டுப்படமுடியாது. மூல ஆசிரியர்கள் மிகப் பழைய காலத்தவர்கள் ; உரையாசிரியர்கள் மிகவும் பிற்பட்டவர்கள். இவர்கள் தங்கள் கருத்தினையும், தங்கள் கால நடைமுறையையும் மூல ஆசிரியனின் வார்த்தைகளில் இணைத்திருக்கிறார்கள். உண்மையில் **10-ஆம் நூற்றாண்டுவரை, தாலிப்பேச்சே கிடையாது."**

—கா. அப்பாத்துரை, எம்.ஏ., எல்.டி.

கம்பனார் கூறும் 'ஐம்படைத் தாலி !'

கம்பனது ராமாயணப் புலம்பலில். தாலி காணக் கிடக்கிறது ! அது, பழந்தமிழ்த் தாலி எது என்பதையும் காட்டுகிறது ! " வால்மீகி சொல்லாததை கம்பன், தமிழ்ப் பண்பாட்டிற் கேற்பச் சொன்னான்" எனும் சிவஞான வாதப்படி, தமிழ்ப் பண்பாட்டுத் 'தாலி', 'தாலி' என்கிற பதத்திலேயே வருகிறது ! கீழே காணப்படுவது, கம்பராமாயணம், பாலகாண்டத்தில் ஒரு பாடல் .

தாலி ஐம்படை
தழுவு மார்பிடை
மாலை, வாய்அமு
தொழுகு மக்களைப்
பாலின் ஊட்டுவார்
செங்கைப் பங்கயம்
வால்நிலா உறக்
குவிவ மானுமே !

இதன் பொருள் : " ஐம்படைத்தாலி அணிந்திருக்கின்ற மார்பில், வாய்நீர் ஒழுகிக்கொண்டிருக்கிற குழந்தைகளுக்குப் பெண்கள் பாற்சோற்றை ஊட்டும்பொழுது, குவிந்திருக்கிற சிவந்த கைகள், சந்திரனைக் கண்டு கூம்பும் தாமரை மலர்களைப்போல இருக்கின்றன." இந்தப் பொருளைக் கூறிய உரையாசிரியர்கள், பழைய சங்க இலக்கியத்தில் வரும் 'தாலி' பற்றி வரிகளையும் எடுத்துக்காட்டி யுள்ளனர். அவை இவை -
சிவஞானத்தைப் 'புறக்கணிக்காத' புறநானூற்றின் எழுபத்து ஏழாவது பாடலில்,

" தாலி களைந்தன்று மிலனே..."

சிவஞானத்தை 'ஆதரிக்கிற' அகநானூற்றின் ஐம்பத்து நாலாவது பாடலில்,

" பொன்னுடைத் தாலி என்மகன்..."

சிவஞானம் 'கண்டறியாத' கலிங்கத்துப் பரணியில், (அவதாரப் பகுதி) ஒன்பதாம் பாடலில்,

" தன்படைகளான திருஐம் படைதரித்தே"

தாலி தாலி யென்று அழுத்தந் திருத்தமாக வருகிற, அசல் வார்த்தைகள் முழுவதும், குழந்தைத் தாலியையே குறிக்கின்றன ! ஆனால், மங்கல அணி, கத்தரிக்காய் அணி, வெண்டைக்காய் அணி என்பனவற்றையெல்லாம் 'தாலியாக்க முயல்கிறார்கள் சில 'அவசரப் புலவர்'களும். 'அறியாமைத் தமிழர்'களும். ஐயோ தமிழே ! என்னே உன் பரிதாபநிலை !



—: காரை முத்துப்புலவர் :—

காமத்துப்பால் 4

காதலிலே பெருஞ்சுவை பயப்பன வற்றுள் 'தழுவுதல்' ஒன்று. மனமொத்த ஒரு ஆணும் பெண்ணும், முதன் முதலாகத் தழுவுகிற இன்பமிருக்கிறதே, அது, அதற்குப் பின்னுலே அவர்கள் வாழ்கிற வாழ்வில் கூட இருக்காது! தொட்ட உடனே சிலிர்க்கும்; மெல்ல நெருங்கி, கட்டிப்பிடித்து இறுகத் தழுவும்போது இந்த உலகமே மறந்துபோகும். இதைத்தான் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கூட,

"ஆரத்தழுவி அனைவிநாடிக்
குள் உயிர்
நாவரும் எனினும் தேன்போல்
வாவேற்பேன்."

என்றார். "தழுவியபின் வரும் சாவை, தேன்போல் வரவேற்பேன்!" ஆகா! தழுவுதலின் சுவையை இரண்டு வரிகளில் அடக்கி விட்டார், கவிஞர்.

இந்தத் தழுவுதலின் முறையையும், நிலையையும் பற்றி, கவிஞர்களும், உடற்கூறு ஆராய்ச்சியாளர்கள் போன்ற சிலரும் கூறியுள்ளனர். எப்படித் தழுவவேண்டும், எப்படித் தழுவினுல் சுவை அதிகம் என்றெல்லாம் ஆராய்ச்சி செய்து கூறியுள்ளனர். வள்ளுவனும் ஒரு சுவையான முறையைக் கூறுகிறுன். சிலர் ஈ கூடப் போகாமல் தழுவ வேண்டும் என்றும், சிலர் கொசுக் கூடப் போகாமல் தழுவவேண்டும் எனவும் கூறுவார்கள். வள்ளுவன் இன்னும் ஒருபடி மேலே போகிருன். காற்றுக்கூடப் புகக்கூடாது என்கிருன்! அப்படியே பசை மாதிரி 'சப்'பென்று ஒட்டிக் கொள்ளவேண்டும் என்கிருன். சாரையும் சர்ப்பமும் பின்னுகிற மாதிரி, தழுவவுக்கு இலக்கணம் கூறுகிருன்!

"வீழும் இருவர்க்கு இனிதே
வளியிடை
போழப்படாஅ முயக்கு"

"காற்று இடையறுத்துச் செல்ல முடியாதபடி தழுவுதல், மனமொத்த இருவர்க்கு இன்பம் பயப்பதாகும்!" என்கிருன். பலமில்லாத ஆண்மகனுக்கும் காதல் நேரத்தில் யானை பலம் வருவதுண்டு; துவளும் கொடி போன்ற மாதர்களும் அப்பொழுது 'அடலேறு'கள் போல் மாறுவதுண்டு. வீதியிலே, வண்டியிலே கல் ஏற்றும்போது, கல் தூக்குகிற தொழிலாளத் தோழர்கள், "டேய் சாமி! விடாதே! ஏலேலோ! கொஞ்சம்! கொஞ்சம்!" என்றெல்லாம் சப்தம் கொடுத்தபடி கல்லை நகர்த்துவதுண்டு. இந்தத் தழுவுதலில் அந்த சப்தம் கூடாதே தவிர, அந்த பலம் வேண்டும்! அப்பொழுதுதான் காற்று இடையறுத்துச் செல்லாமல் தழுவமுடியும்! தழுவுதலின் எல்லையான இந்தக் குறள், நாகரிகமான முறையில் அமைந்துள்ளது.

ஆனுல், அநாகரீகமும் காட்டுமிராண்டித்தனமும் நிறைந்த 'தெய்வீகக் காதலை சிருட்டிக்கிற கம்பன், இந்தத் தழுவுதல் விவகாரத்திலும் தன் கைவரிசையைக் காட்டுகிருன்.

'கம்பராமாயணம்' வரைக்காட்சிப் படலத்தில் ஒரு பாடல்.

ஒரு கணவனும் மனைவியும் இறுகத் தழுவிக் கிடக்கிறுர்கள். அந்த வேளையிலே மனைவி, கணவனின் முதுகைத் தடவுகிறுள். தழுவும்போது அந்த உற்சாகப் பெருக்கிலே, கணவன் முதுகை மனைவி தடவுவது இயற்கைதானே? இதற்கென்ன உவமை சொல்லலாம்? ஏதாவது இயற்கை நிகழ்ச்சிகள் இருந்தால் சொல்லலாம்; அல்லது அது அவளது ஆனந்தத்தை வெளிப்படுத்தும் விதத்தைக் கூறலாம்! ஆனுல் கம்பன் விடுவானு? அம்பு போடுகிறுன்! மார்பிலிருக்கும் இரண்டுக்கும் கூர்மையான வேலின் சக்தியைக் கொடுக்கிறுன்!

"மனைவி, கணவன் தன்னைத் தழுவும்போது அவனது முதுகைத் தடவுகிறுள்; அது ஏன் தெரியுமா? தனது இரண்டு தனபாகங்களும் கணவனது மார்பைக் குத்தி, முதுகுப்புறம் வந்துவிட்டதோ என்று தேடிப் பார்க்கிறுள்!"

அட கற்பனையே! அந்த அம்மையின் மார்பு என்ன ஆறடிநீள அம்பாகவா வளர்ந்து நிற்கிறது! நல்லவேளை, "அவள் இமயமலையின் அடிவாரத்தில் நின்று தழுவினுள்; குமரிமுனையில் வந்து தேடினுள்" என்று சொல்லாமல் விட்டானே!

காற்றுப் புகாமல் தழுவுதல் சொன்ன வள்ளுவன் எங்கே; மார்பைக் குத்திக் கிழித்து முதுகுப் பக்கம் கைநீட்டும் கம்பன் எங்கே! வள்ளுவன் நாகரிகமானவன்; அவனது திராவிடத் தலைவி நாகரிகமானவள்.

கம்பன் காட்டுமிராண்டி; அவனது ஆரியக் காதலி மிருகத்தனம் படைத்த விலைமாது!

கம்பனின் பாடல் இதுதான்:—

கோலைஉரு அமைந்தேனக்
கோடிய நாட்டத்துஹர்
கலைஉரு அல்குலாள்
கணவற் புல்குவாள்
சிலைஉரு அழிதாச்
சேறிந்த மார்பிப்தன்
முலைஉரு வினஎன
முதுகை நோக்கினுள்!

" " "

கம்பன்தான் அப்படி அநாகரிகமாகப் போயிருக்கிருன். ஆனுல், அவன் மகனெனக் கருதப்படும் அம்பிகாபதி, கொஞ்சம் நாகரிகமாகத் தழுவுகிருன்.

பங்கேருக மலர்ப்பாதம் பணிந்து
பரிமளப்பூங்
கோங்கேர் அலங்கற்குழன்
மணங்கோண்டு குவிமுலையும்
சங்கேர் கழுத்தும் தடம்பணைத்
தோளும் தழுவி இங்ஙன்
எங்கே எவருக்கிவரும் இக்காத
லும் எய்தியதே!

தாமரைப் பாதம் பணிந்து, பரிமளப்பூந்தேன் மணக்கும் கூந்தல் மணங்கொண்டு, குவிந்த தனத்தையும் சங்குபோலும் கழுத்தையும், மூங்கில் போன்ற தோள்களையும் தழுவும் இந்தக் காதல் எவர்க்குக் கிடைக்கும்?" என்கிருன். இது கொஞ்சம் நாகரிகம்தானே?

" " "

'கலிங்கத்துப்பரணி'யில் செயங்கொண்டானும் தழுவுகிருன். இது வேகமான தழுவல் அல்ல. மெதுவானது. மலரைத் தழுவுதல் போன்றது; கண்ணுடிப்பத்திரத்தைக் கற்றரையில் வைப்பது' போன்றது! அப்படி அணைத்து, மெல்ல விலகுகிருன், செயங்கொண்டான் காட்டும் காதலன். அதற்குப் பிறகு காதலி கண்ணீர் சொரிகிருள்.

" மெய்யில் அணைத்துருகிப்
பைய அகன்றவர்

என்கிருன். அணைத்து, உருகுகிருனும், மெழுகுபோல! இதுவள்ளுவனை அனுசரித்த உருக்கம்!

★

நேரம் தவறும் சர்ச்சில்!

'இன்ன நேரத்தில் உங்களைச் சந்திக்கிறேன்' என்று யாருக்காவது வாக்களித்தோமானுல், நிமிஷமும் பிசகாமல் அந்த நேரத்தில் போய் நிற்பதுதான்மரியாதை. இந்த மரியாதை இந்தியருக்குத் தெரிவதில்லை என்றும் ஆங்கிலேயர் இதில் தவறுவதேயில்லையென்றும் சொல்லுவார்கள். ஆனுல் பிரிட்டிஷ் பிரதம மந்திரி சர்ச்சில் மட்டில் இதற்கு விலக்காவார். தம்மிடம் குறித்த நேரத்துக்குப் பிறர் வரத் தவறினுல், சர்ச்சிலுக்கு மகா கோபம் வருமாம். ஆனுல் அவர் மாத்திரம் 15 நிமிஷம் முதல் அரை மணிநேரம் வரையில் யாரையும் காக்க வைக்காமல் விடுவதில்லையாம். பின்னுல் எழாம் எட்வர்ட் மன்னராணரே, அவர் வேல்ஸ் இளவரசராய் இருந்த காலத்தில், சர்ச்சில் ஓர் உதவி லெப்டினண்ட். பதவி வகித்துக் கொண்டிருந்தாராம். அப்போது சர்ச்சிலை வேல்ஸ் இளவரசர் ஒரு விருந்துக்கு அழைத்திராராம். அச்சமயம் 50 நிமிஷ நேரம் ராஜ குடும்பத்தினரை, விருந்தாளி சர்ச்சில் காக்க வைத்துவிட்டார்.

நாவலரின் 'சொற்செட்டு'!

தோழர் நெடுஞ்செழியனுர், வார்த்தைகளை அழுத்தமாகவும் சிக்கனமாகவும் உபயோகிப்பவர். உள்ளம் குழந்தை உள்ளம். அவரோடு பேசிக் கொண்டிருந்தால் கவலைகளே தோன்றுவதில்லை. நான் இயக்கத்திற்கு வந்த புதிதில், அவரை ஒரு முறை எங்களூர் (காரைக்குடி) கூட்டத்திற்கு அழைத்திருந்தோம். அவரும் தனக்கே உரித்தான, 'காலந்தவருு ஒழுங்கு முறை'யோடு வந்து சேர்ந்து விட்டார். நான் அவரிடம் என் பிரதாபங்களைப் பேச ஆரம்பித்தேன்.

"நான் அந்தக் கூட்டத்திற்குப் போய் விட்டேன்; இவருக்கு இவ்வளவு கொடுத்தேன். ஒருவர் வேஷ்டி கேட்டார், கொடுத்தேன்—அவருக்காக இவ்வளவு கஷ்டப்பட்டேன்" என்றெல்லாம், என் பிரதாபங்களை அளந்தேன். அப்போது ஒரு நண்பர் அங்கு வந்தார். நாவலரிடம், "என்ன சொல்கிருர் கண்ணதாசன்?" என்று கேட்டார்.

நாவலர் சுருக்கமாக-செட்டாக, "என்பும் உரியன் பிறர்க்கு என்கிருர்!" என்று முடித்தார்!

சம்பத் 'வெடி'!

தோழர்—சொல்லின் செல்வர் ஈ. வெ. கி. சம்பத் நிதான சிந்தனையாளர். அவர் சொல்லும் ஒவ்வொரு வார்த்தைகளும் பல கருத்துக்களை உள்ளடக்கிக் கொண்டிருக்கும். நண்பர் ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ. அவர்கள், காணை - கஞ்சனூர் தேர்தலில் வெற்றிபெற்றதும் சென்னை வந்திருந்தார். நாங்கள் பெரம்பூரில் ஒரு கூட்டத்தில் பேசிவிட்டு, (சம்பத், கோவிந்தசாமி, காஞ்சி கல்யாணசுந்தரம், நான்) ஒரு இடத்தில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தோம். அப்போது தோழர் கோவிந்தசாமி, மந்திரி ராமசாமி படையாச்சியைப்பற்றிக் கூறும்பொழுது,

"என்ன சார் இது! ஒரு மந்திரி, முச்சந்தியில் நின்று ஆள்சேர்க்கிருர்!" என்று, ஆச்சரியமாகக் குறிப்பிட்டார்.

தோழர் சம்பத், தனக்கே உரித்தான நிதானத்தோடு, "அப்படிச் சொல்லாதீர்கள்! முச்சந்தியில் நின்று ஆள் சேர்க்கும் தகுதி உடையவர் மந்திரியாக இருக்கிருரே என்று ஆச்சரியப் படுங்கள்!" என்று முடித்தார்.

—கண்ணதாசன்

15-11-54-ல் வெளிவருகிறது!

இலக்கியத்தில் காதல்

காரை முத்துப்புலவர் எழுதியது

விலை ரூ. ஒன்று

விவரங்களுக்கு:

அருணோதயம்

5, தம்பைய ரோட்டி தெரு, மேற்கு மாம்பலம். சென்னை-17.

தமிழ்ச் சாதியும் 'தாலி'யும்!

டாக்டர் மா. இராசமாணிக்கனாரின் தமிழரிடையே 'தாலி'யணியும் வழக்கம் இல்லை என்ற பூரணம் பெற்ற முடிவை எதிர்த்து தோழர் சிவஞானம் 25-10-54 தினத்தந்தியில் குறைவுபட்ட ஆராய்ச்சி செய்திருந்தார். அது ஆராய்ச்சியல்ல - தவறுடையது என்பதற்கு 30-10-54 'தென்றலில்' இலக்கியச் சான்றுகளுடன் ஒரு விளக்கம் எழுதி இருந்தோம். சங்க காலத்தில் தாலியணியும் வழக்கு இல்லை என்பதற்கு மேலும் ஒரு அரிய ஆராய்ச்சிக் கட்டுரை தீட்டியுள்ளார் 7-11-54 'தமிழ் நாடு' இதழில். அந்தக் கட்டுரை கீழே தரப்படுகிறது.

[ஆசிரியர்]

குறிப்பிட்ட ஒரு பொருளைப் பற்றிய உண்மையை அறிய விரும்புவோர் நூல்களில் அது பேசப்படும் இடங்களைக் கண்டறிந்து, அதன் பொருளுணர்ந்து தெளிதல் வேண்டும். குறிப்பிட்ட அவ்வொன்றைப் பற்றி நூலாசிரியர் கூறுவது யாது, அவர் காலம் யாது என்பன அறிதல் இன்றியமையாதது. நூலுக்கு உரையாசிரியர் என ஒருவர் இருப்பாராயின் அவர் கூறும் உரை யாது, அவரது காலம் யாது என்பவற்றை அடுத்து அறிதல் வேண்டும்.

நூலாசிரியர் காலத்துப் பழக்க வழக்கங்கள் ஒருவகையினவாக இருக்கும். அவருக்குப் பல நூற்றுண்டுகட்குப் பின்வந்த உரையாசிரியர் காலத்துப் பழக்க வழக்கங்கள் வேறாக இருக்கும். வளரும் சமுதாயத்தில் இத்தகைய வேறுபாடுகள் உண்டாதல் இயல்பு. ஆகவே, உரைகாரர்களுடைய உரையில் அவர் காலப் பழக்கவழக்கங்கள் காணப்படல் இயற்கை. மேலும், உரையாசிரியர்கள் தத்தம் சமயச் சார்பு பற்றியும் உரை கூறுதல் உண்டு. பரம வைதிகராகிய பரிமேலழகர் திருக்குறளுக்கு வகுத்த உரையும் பரம சமணராகிய மணக்குடவர் அதே திருக்குறளுக்கு வகுத்த உரையுமே இதற்கு சான்றுகளாகும். மேலும் இன்று திருக்குறளுக்கு வெளிவந்துள்ள பரிமேலழகர் உரை, மணக்குடவர் உரை, பரிதியார் உரை, காளிங்கர் உரை என்னும் நான்கையும் படிக்கும் அறிஞர்க்குச் சில இடங்களில் திருவள்ளுவர் கொண்ட உண்மைக் கருத்துக்கள் இன்னவை என்பன புலனாகவில்லை. இதற்குக் காரணம் ஒவ்வொருவர் உரை ஒவ்வொரு சார்பு பற்றி இருத்தலே ஆகும்.

உரையாசிரியரின் காலத்தை ஆய்தல் வேண்டும்!

எந்தச் சமுதாயத்திலும் பண்டைக் காலம் முதல் ஒரே வகையான பழக்கவழக்கங்கள் நிலை பெற்று வந்திருக்கின்றன என்று அறிஞர் கூறுர். எந்த நாட்டுச் சமுதாய வரலாறும் இவ்வுண்மையை நன்குணர்த்தும். மலைக்குகைகளில் வாழ்ந்தமுதல் மனிதன் இயற்கைப் பொருள்களைப் பயன்படுத்த அறிந்த பின்னரே மண் வீடுகட்டிக் கூறை வேய்ந்து வாழத் தொடங்கினான்; மண்ணைக் கொண்டு செங்கல் செய்ய அறிந்த பின்னரே செங்கல் வீடு தோற்றமளித்தது. இவ்வாறே அவனது வாழ்வில் தோன்றிய ஒவ்வொரு தொழிலும், கலையும் பிறவும் படிப்படியான வளர்ச்சிபெற்றன என்பதை மனிதனது வரலாறு தெளிவுறுத்தும்.

மேலே கூறப்பெற்ற மனிதன் படிப்படியாக அறிவு பெற்ற வரலாற்றையும், நூலாசிரியர்க்கும் உரையாசிரியர்க்கும் உள்ள கால வேறுபாட்டினையும், இவ்விடையீட்டுக் காலத்தில் தோன்றிய சமுதாய வேறுபாட்டினையும் நன்கு உளத்திற் பதித்துக் கொண்டபின்னரே, ஒருவர் தாம் ஆராயப்புகும் பொருள் பற்றி ஆராய்ச்சி நிகழ்த்துதல் முறையாகும் இங்ஙனம் ஆராய்ச்சி நிகழ்த்துவோர் மற்றொன்றையும் கருத்தில் இருத்துதல் வேண்டும். அஃதாவது, பெரும்பாலும் மூல நூல்கள் கூறும் உண்மைகளைத் துணையாகக்கொண்டு முடிவுக்கு வருதல் என்பது. இங்ஙனமின்றி முடிவை முன்னரே மனத்தில் நிறுத்திக்கொண்டு, அதற்கேற்ப மூலங்களுக்கு உரை கூறுதலோ, உரையாசிரியர் துணையை நாடுதலோ, அல்லது 'இதுதான் பொருள்; வேறில்லை' என்று அழிவழக்குப் பேசுதலோ சான்றோர் மதிக்கும் சாத்திரீய ஆராய்ச்சி **(Scientific Research)** ஆகாது.

இம் முகவுரையை உள்ளத்திற்கொண்டு, இன்றுள்ள தமிழர் திருமணத்தில் தாலிகட்டும் வழக்கம் இருத்தல் போலச் சங்க காலத்திலும், பிற்பட்ட நூற்றாண்டுகளிலும் (ஏறத்தாழக் கி. பி. 10-ஆம் நூற்றாண்டு வரை) நடைபெற்ற தமிழர் திருமணங்களில் தாலிகட்டும் வழக்கம் இருந்ததா என்பதனை இங்கு ஆராய்வோம்.

சங்க நூல்கள்

சங்க காலம் என்பது ஏறத்தாழக் கி. மு. 3-ஆம் நூற்றாண்டிலிருந்து கி. பி. 3-ஆம் நூற்றாண்டு வரை என்று கூறலாம். இப்பரந்து பட்ட காலத்தில் பலநூறு புலவர்கள் தமிழகத்தில் வாழ்ந்தனர்; அரசர்களையும் வள்ளல்களையும் பாடினர்; அகம், புறம் பற்றிய பாடல்களைச் செய்தனர். இக்காலத்தில் எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும், திருக்குறளும், சிலப்பதிகாரமும், மணிமேகலையும் செய்யப்பட்டன என்பது அறிஞர் பலரும் அறிந்ததே. இவற்றுள் கி. பி. 2-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் செய்யப்பட்டன. இப்பறந்துபட்ட சங்க காலத்திலேயே தொகை நூற் பாடல்களில் காணப்படும் திருமணச் செய்திகள் சிலவாகவும், சிலப்பதிகாரத்தில் காணப்படும் செய்திகள் பலவாகவும் இருத்தலைக் காணலாம்.

அகநானூறும் திருமணமும்

அகநானூற்றில் 86-ஆம் செய்யுளும், 136-ஆம் செய்யுளும் இரண்டு திருமணங்களைக் கூறுவனவாம். அவற்றுள் 86-ஆம் பாடல் பின்வரும் செய்திகளைத் தெரிவிக்கின்றது.

(1) மணத்தில் முதல் நிகழ்ச்சியாக விருந்து நடைபெற்றது. (2) மணப்பந்தலின் கீழ் மணல் பரப்பப்பெற்று, விளக்குவைக்கப் பட்டது. (3) இளங்காலைப் போதில், திங்கள் உரோகிணியுடன் கூடிய நல்லோரையில், முது பெண்டிர் மணமகளை நீராட்டுதற்குரிய நீரைக் குடங்களில் ஏந்தி வந்தனர். (4) அந்நீர்க் குடங்களில் மலரும் நெல்லும் தூவிப் பிள்ளைபெற்ற வாழ்வரசியர் நால்வர் மணமகளை, "கற்பு நெறியினின்றும் வழுவாமல் பல நலங்களைச் செய்து கணவன் விரும்பத் தக்க மனைவி ஆவாய்", என்று வாழ்த்தி மண நீராட்டினர். இவற்றுடன் ''வதுவை நன்மணங் கழிந்தது''. செய்யுள் 136 கீழ்வரும் விவரங்களைத் தருகின்றது.

டாக்டர்
மா. இராசமாணிக்கனார்

(1) இறைச்சி கலந்து ஆக்கப்பட்ட வெண் சோற்று விருந்து நடைபெற்றது; (2) திங்கள் உரோகிணியைக் கூடிய நல்லோரையில், மணவறை அலங்கரிக்கப் பட்டு இறை வழிபாடு நடைபெற்றது; (3) மண முழவும் முரசமும் முழங்கின; (4) தலைவிக்கு மண நீராட்டு நடைபெற்றது; (5) வாகையிலை; அறுகின் கிழங்கிலுள்ள அரும்புகளோடு சேர்த்துக் கட்டப் பெற்ற வெண்ணூல் தலைவிக்குக் காப்பாகச் சூட்டப்பட்டது; தலைவி தூய உடைகளை அணிந்து கொண்டாள். (7) தமர் தலைவிக்கு அணிகள் அணிவித்தனர்; வியர்வை துடைத்தனர். இவ்வளவே மணச் செய்திகளாகக் கூறப்பட்டுள்ளன.

இவ்விரண்டு திருமணச் சடங்குகளிலும் மணமக்கட்கு மண நீராட்டு தலை சிறப்புச் சடங்காக இருத்தல் காணத்தக்கது. பலர் அறிய விருந்து நடத்தி மண மக்களுக்கு நீராட்டிப் புத்தாடை உடுத்து, அணிகலன்கள் அணிவித்து, மணமக்கள் இருவரையும் மணப் பந்தலில் பலர் அறிய உட்கார வைத்தலே திருமண வினையாக அக்காலத்தில் இருந்ததை இவற்றால் அறியலாம். இவற்றுள், (1) தீ வளர்த்தல் இல்லை; (2) தீ வலம் வருதல் இல்லை; (3) தட்சிணை பெறப் புரோகிதர் இல்லை. இவை முற்றும் தமிழர்க்கே உரிய திருமணங்களாகும்", என்று காலஞ் சென்ற வரலாற்றுப் பேராசிரியரான திரு. பி. டி. சீனிவாச ஐயங்கார் அவர்கள் தாம் வரைந்த ''தமிழர் வரலாறு'' என்னும் ஆங்கில ஆராய்ச்சி நூலில் (பக்கம் 80) கூறியிருத்தல் ஊன்றி நோக்கத்தக்கது.

இவ்விரு திருமணங்களிலும், தாலி கட்டுதல் சிறப்புச் சடங்காகச் சங்க காலத்தில் இருந்திருக்குமாயின் இவ்விரு பாக்களில் ஒன்றிலேனும், நீராட்டு, விருந்து முதலியவற்றைக் கூறும் புலவர் குறியாதிருத்தல் கூடுமா? என்பதை அறிஞர் எண்ணித் தெளிவாராக.

கண்ணகி திருமணம்

கண்ணகி திருமணம் பற்றிக் கூறும் சிலப்பதிகார மங்கல வாழ்த்துப் பாடலில் கீழ்வரும் திருமணச் செய்திகள் இடம் பெற்றுள்ளன. (சந்திரனும் உரோகிணியும் கூடிய நல்லோரையில்) (1) திருமணப் பந்தலில் மாமுது பார்ப்பான் மறை வழி காட்டிடக் கோவலன் கண்ணகியுடன் தீ வலஞ் செய்தான்; (2) பெண்டிர் பலர் வாசனைப் பொருள்களை ஏந்தி நின்றனர்; சிலர் மலர்களை ஏந்தி நின்றனர்; சிலர் உரையால் வாழ்த்தினர்; சிலர் பாட்டால் வாழ்த்தினர்; சிலர் பல வகைச் சாந்துகளை ஏந்தி நின்றனர்; வேறு சிலர் நறும் புகைப் பொருள்களைத் தாங்கி நின்றனர்; மற்றுஞ் சிலர் மாலைகளை ஏந்தி நின்றனர்; சிலர் பல வகைச் சுண்ணங்களை ஏந்தி நின்றனர்; சிலர் விளக்குகளையும் வேறு சிலர் கலங்களையும், மற்றுஞ் சிலர் முளைப் பாலிகையையும் ஏந்தி நின்றனர். (3) கொடி போன்ற மகளிர், ''இக் கண்ணகி தன் தலைவனைப் பிரியாதவள் ஆகுக; இவள் காதலனும் இவளைத் தழுவிய கை நெகிழாமல் சேர்ந்திருப்பானாக; இருவர் அன்பும் தீதற்று விளங்குக'', என்று தம் வழி படு கடவுளை வணங்கினர்; சிலர் மலர்களை மணமக்கள் மீது தூவினர்.

இத்திருமணத்தில், அகநானூற்றுத் திருமணங்களில் குறிக்கப் படாத மாமுது பாப்பான் மறை வழி காட்டலும், தீ வலம் வருதலும், பாலிகை முதலியன மகளிர் ஏந்தி நிற்றலும் புதியனவாக வந்திருத்தல் காண்க. இவற்றுள் சிறப்பாகக் குறிக்கத் தகுந்தது கோவலன் கண்ணகியின் கையைப் பற்றி (பாணிக்கிரகணம்) தீ வலம் வருதல். இவ்வாறு கோவலன் கண்ணகியின் கையைப் பற்றியிருந்தமையே சிறப்புடையது என்பது, ''கவவுக்கை நெகிழாமல்''; என்னும் மங்கல மகளிர் வாழ்த்தால் வலியுறும். இத் திருமணத்தில் கோவலன் கண்ணகியின் கையைப் பலர் அறியப் பற்றிய வண்ணம் தீ வலம் செய்ததைக் கண்டவர் நோன்பு செய்தாராயினர் என்று இளங்கோவடிகள் கூறுதலால், பாணிக்கிரகணமே கண்ணகியின் திருமணத்தில் சிறப்புடைச் சடங்காகச் செய்யப் பட்டமை தெளியலாம்.

ஈகையரிய இழை'யெனல் தாலியே அல்ல!

உரையாசிரியர்கள் தம் கருத்தையே உரையாக்குவதுண்டு!

இத்திருமணத்தில் தாலிக்கு இடமுண்டா?

மேலே சொல்லப்பட்ட கண்ண கியின் திருமணச் சடங்குகளுக்கு முன்பு, ''அகலுள் மங்கல அணி எழுந்தது'' என்று ஒருவரி இளங் கோவடிகள் பாடியுள்ளார். இதனில் வரும் **''மங்கல அணி''** என் பதற்குச் சிலப்பதிகார அரும்பத உரையாசிரியர் மாங்கலிய சூத்திரம்' என்று பொருள் கூறியுள்ளார். ஆனல் சிலப்பதிகாரத்திற்கு விளக்க மான உரை எழுதப்புகுந்த அடியார்க்கு நல்லார், மங்கல அணி -- மங்கல அணி என்றே பொருள் கூறினர். அரும்பத உரையாசிரியர் கருத்துப்படி மாங்கலிய சூத்திரம் இருந்திருக்குமாயின், அது திரு மணச் சடங்கில் கூறப்படாமைக்குக் காரணம் யாது? என்ற வினு எழு மன்றே?

மனையறம் படுத்த காதையில் கண்ணகியின் நலத்தைப் பாராட் டத் தொடங்கிய கோவலன்.

''மறுவின் மங்கல அணியே
அன்றியும்
பிறிதணி யணியப் பெற்றதை
எவன் கொல்?''

என்று கண்ணகியை நோக்கிக் கேட்டதாக இளங்கோவடிகள் கூறியுள்ளார். இதில் வரும் 'மங்கல அணி' என்பதற்கு அதே அரும்பத உரையாசிரியர் **'இயற்கை** எனைய இரண்டிடங்களில் 'மங்கல அணி'க்கு 'இயற்கையழகு' என்று உரையாசிரியர் பொருள் கூறியதே பொருந்தும். முதலிடத்தில் ''ஊரில் மாங்கலிய சூத்திரம் வலம் செய்தது' என்று இவர் கூற, அடியார்க்கு நல்லார், ''மங்கல அணி ஊரெங்கும் எழுந்தது'' என்று கூறியுள்ளார். பெருங்குடி வணிகர் மணமாதலின் முரசம் முதலிய பல-வாத்தியங்கள் முழங் கின. அதனுல் நகரத்தில் மங்கல அணி (திருமணச்சிறப்பு) எழுந்தது என்று பொருள் கொள்ளலாம். இன்னும் திருமணம் நடப்பதற்குச் சற்று முன் மணமக்களைச் சேர்ந்த நெருங்கிய உறவினர் தம் உற்றார் உறவினர் வீடுகட்குச் சென்று மண நேரத்தை நினைவூட்டி மணத்திற்கு வருமாறு அழைத்தல் மரபாக இருக்கின்றது. இங்ஙனம் உறவினர் செய்தலை ''வீடு சொல்லுதல்'' என்னும் தொடரால் இன்றளவும் தமிழ்மக்கள் வழங்கி வருகின்றனர். இம்மங்கலச் செய்தியை கூறுவார் ஒருவர் பின் இருவராக முறையாக (அணியாக) சென்று மீள்தலே, ''அகலுள் மங்கலஅணி எழுந்தது'' என்ற அழகிய தொடரால் இளங் கோவடிகள் குறித்தனர் என்று கூறல் மிகவும் பொருந்தும். இந் நிகழ்ச்சிக்கு முன்னரே பொதுப் பட ஊரார் அனைவருக்கும் யானை மீது சென்று மகளிர் கண்ணகியின் களைந்தனர் என்பது நினைவில் இருத்தத்தக்கது.

இழை களைதல்

புறநானூறு 127-ம் பாடலில் ஆய் வள்ளல் தான் கொடுக்கத் தகுந்த எல்லாப் பொருள்களையும் பரிசிலர்க்குக் கொடுத்து பின் தன் மனைவியர் பாலுள்ள கொடைக்குரிய பொருள்களை எல்லாம் கொடுத்து வறியவன் ஆனன். இந்நிலையில் அவன் மனைவியரிடம் ''ஈகை அரிய **இழையணி** அவன் மனைவியரிடம் மட்டும் எஞ்சி நின்றது என்பது காணப்படுகிறது. இச்செய்யுள் வரிக்கு ''கொடுத்தற்கரிய நகை'' என்பது நேரான பொருள். ஆனல் புறநானூற்று உரையாசிரியர் கொடுத்தற்கரிய ''மாங்கலிய சூத்திரம்'' என்று பொருள் கூறினர். இழை என்னும் சொல்லுக்கு மாங் கலிய சூத்திரம் என்று பொருள் கூறிய இவ்வுரையாசிரியரே மற் ருெரு பாடலில் இது போன்ற இடத் திலேயே கூருமை நோக்கத் தக்கது. புறநானூறு 224-ஆம் பாடலில், சோழன், கரிகாலன்,

''இறந்தோன் தானே
அளித்திவ்வுலகம்...
மெல்லிய மகளிரும் **இழைகளைந்**
தனரே'' (புறம்-224)

கொண்டு ஆராய்ச்சியாளர் ஊக்கங் கொண்டு உண்மை காண்பதே உறுபயன் விளைப்பதாகும்.

அருங்கலம் யாது?

'கலம்' என்பது நகையென்னும் பொருளையும் உடையது. 'நன் கலம்' என்பது சாதாரண நகையை விட ஓரளவு உயர்ந்த மதிப்புடையது.

''நன்கலம் பரிசின் மாக்கட்கு வரிசையின்நல்கி'' — (புறம்-6) என வருவது காண்க. அருங்கலம் என் பது அரிய நகை **(prescious orna ment)** எனப் பொருள்படும். அதுவே இல்லக்கிழத்தியை அழகு செய்யும் பொருளாம். 'அருங்கலம்' என்பதற்கு 'அழகு செய்வது என் னும் பொருளுண்மையை, 'பூவினுக் கருங்கலம் பொங்கு தா மரை'' என்னும் அப்பரது வாக் கால் அறியலாம். பல கலன்களை அணிந்த தலைவி ஒருத்திக்குக் கண வன் திருமணக் காலத்தில் தங்கள் திருமணத்தின் அடையாளமாக வழங்கும் விலையுயர்ந்த நகையே 'அருங்கலம்' எனலாம். அதுவே அவளை வாழ்வரசியாக வைத்திருக் கும் அருங்கலமாகும். அதனை எத் தகைய துயர் நிலையிலும் அவள் கழற்றுதல் செய்யாள். அது பிறர்க்கு ஈயமுடியாத அருங்கலம். அதனுற்றுன் அது 'ஈகையரிய இழை' எனப்பட்டது. கணவன் வாழும் வரை அவள் உடம்பிலேயே இருந்தது, கணவன் இறந்த பிறகு

கூறியனவெல்லாம் குழந்தையின் தாலியே!

அழகு' என்று பொருள் கூறியுள் ளார். இவ்வடிகளின் பொருள், குற்றமற்ற நினது **புனையாத அழ** கன்றியும் வேறு சில அணிகளை அணிந்ததனுல் பெற்ற உதவியாது? என்று அடியார்க்கு நல்லார் கூறி யுள்ளார்; இங்ஙனம் அவர், மங் கல அணி — புனையாத அழகு என்று கூறி,மேலும்,'மங்கல அணி மாங்கலியம் **என்பாரும் உளர்'** என்று கூறி முடித்தார். எனவே, 'மங்கல அணி' மாங்கலிய சூத்திர மன்று' என்பது அடியார்க்கு நல் லார் கருத்தால் தெளியலாம். அரும்பத உரையாசிரியரும் இவ் விடத்தில் இயற்கை அழகு' என்றே கொண்டார்.

இனி, அந்தி மாலைச் சிறப்புச்செய் காதையில், கோவலன் பிரிவால் வருந்திய கண்ணகி,

''மங்கல அணியிற் பிறிதணி
மகிழாள்''
(வரி—50)

என்று இளங்கோவடிகள் குறித் துள்ளார். இங்கும் அதே அரும் பத உரையாசிரியர் 'மங்கல அணி இயற்கை அழகு' என்றே பொருள் கூறினர். அடியார்க்கு நல்லார், 'மங்கல அணியிற் பிறிதணி- மங்கல அணியின் வேறான அணி' என்று பொருள் கூறினர். கண வன் பிரிவால் வாடிய கண்ணகி எவ்வித நகையும் இல்லாமல் இயற்கையழகோடு இருந்தாள்' என்பதே இவ்வரியின் பொருள் என்பது தெரிகிறது. இம் மூன்று இடங்களில் முதலிடத்தைத் தவிர, திருமணத்தை அறிவித்தனர் என்பது இங்கு அறியத்தரும்.

தொடிகளைதலும் உடைத்தலும்

இனி கணவன் மதுரையில் கொலையுண்டபின்பு மதுரையை எரித்த கண்ணகி துர்க்கையின் கோயில் வாசலில் ''பொற்றெடி தகர்த்தாள்;'' ''கிழக்கு வாசல் வழியாகக் கணவனேடு வந்தேன்; இப்பொழுது மேற்கு வாசல் வழியே (கணவனை இழந்து) தனியே செல் கின்றேன்,'' என்று கூறி வையைக் கரை வழியே சென்றுள் என்று இளங்கோவடிகள் கூறியுள்ளார்.

கண்ணகி, கணவன் இறந்த பிறகு தன் கைவளையல்களை உடைத் தாள் என்பது கவனிக்கத் தக்கது. அது வாழ்வரசி (சுமங்கலி)யின் அறிகுறியா? இதற்குரிய விடையைப் புறநானூற்றுப்பாடல் ஒன்று தரு கின்றது. 'வெளிமான் என்ற வள் ளல் இறந்தான். அவன் உரிமை மகளிர் தொடி கழிக்கப்பட்டார்.' **'-தொடிகழி மகளிர்''** (புறம்-238)

என வரும் இடம் நோக்கத் தக்கது. இவ்விரண்டாலும் கண வனை இழந்த மகளிர் தமது கைம்மை நிலைக்கு அறிகுறியாகத் தொடியைக் (வளையல்) களைதல் மரபு என்பது தெரிகின்ற தன்றே?

கண்ணகி கணவனை இழந்த பின் பும், வெளிமான் மனைவியர் தம் கணவனை இழந்த பின்பும் தொடி களைந்தனர்...

அகநானூறு 208-ஆம் செய் யுளில் வெளியன் வேண்மான் பகைவரோடு போரிட்டு மாண்டான்; அவன் உரிமை மகளிர் தாம் அணிந் திருந்த மலர்மாலையைப் பிய்த் தெறிந்து அழுகை ஆரவாரம் செய் தனர் என்பது கூறப்பட்டுள்ளது; மலர் அணிதல் வாழ்வரசியர்க்குச் சிறந்த அடையாளம் என்பதும், அதனை நீக்குவோர் அமங்கலிகளே என்பதும் நாடறிந்த செய்தியாகும். இங்ஙனமே கணவனை இழந்த மக ளிர் (பிற்காலத்தில் நுழைந்த தாலியைக் களைதலோடு) வளையல் களைக் கழற்றி உடைத்தல் தமிழ்ச் சமுதாயத்தில் பல வகுப்பினரிடம் காணலாம், கழற்றி வறிதே எறிந்து விட்டால் அறியாச் சிறு பிள்ளைகள் அவற்றை எடுத்து அணி தல் கூடும். அங்ஙனம் அணிதல் அமங்கலம் எனக்கருதி அவற்றை அம்மகளிர் தகர்க்கின்றனர் என்பது இங்கு அறியத்தகும்.

இங்கு கரிகாலன் இறந்தான்! அதனுல் அவன் மகளிர் இழை களைந்தனர்' என்பது நேரான பொருள். இங்கு வந்துள்ள 'இழை' என்பதற்கு, அருங்கல அணி முதல வாகிய அணிகள்' என்று அதே உரையாசிரியர் பொருள் தந்துள் ளார். புறம் 127-ம் பாடலில் இழை-மாங்கலிய சூத்திரம்' என்று கூறிய உரையாசிரியர் புறம் 224-ல், 'இழை - அருங்கல அணி முதல வாகிய அணிகள்' என்று கூறியது ஏன்? இங்ஙனம் உரையாசிரியர் களின் தடுமாற்ற உரைகளைக் கழற்றப்படுவது அவ்வணி. அத ஞற்றுன் கரிகாலனை இழந்த மனை வியர் 'இழைகளைந்தனர் என்று கூறப்பட்டனர். கண்ணகி கழற்றிய தொடியையும், கரிகாலன் மனைவி யர் கழற்றிய இழையையும், ஆய வேள் மனைவியர் அணிந்திருந்த 'ஈகையரிய இழையையும்', அருங் கலம்' என்னும் பொதுப் பெயரால் குறிக்கலாம். இங்ஙனம் மணமகன் அருங்கலம் கொடுத்து மணம் புரி தல், இறையனுர் அகப்பொருள் உரையில் ''தலைமகன் பார்ப்பார் சான்றோரை முன்னிட்டு அருங் கலங்களோடு வரைதற்குப் புகுவன்' என்று குறிக்கப்பட்டுள்ளது, அவ் வுரையில் மேற் கோளாகவரும் பாண்டிக்கோவையில் அருங்கலம் அணிதல்' என்பதற்குப் பதிலாகப் 'பொன் அணிதல் என்பது ஆளப் பட்டுள்ளது. நம்பியகப் பொருளுக்கு இலக்கியமாக இலங்கும் தஞ்சை வாணன் கோவைச் செய்யுளிலும் 'பொன் புனைதல்' என்பது ஆளப் பட்டுள்ளது. (செய்யுள் 359)

இங்ஙனம் மணமகன் அந்தணர் சான்றோர் முன்னிட்டு அருங்கலம் தந்து மணத்தல், நம்பியகப் பொருள் விளக்கத்திலும் தெளி வாகச் சுட்டப்பட்டுள்ளது.

''தன்னூர் வரைதலும் தன்மனை
வரைதலும்
என்னுமிவ் விரண்டொழித்
தெவற்றினுங் கிழவோன்
அந்தனர் சான்றோர்
முன்னிட்டருங்கலந்

அவசரப் புலவர்கள் இந்த விளக்கத்தைக் காண்க!

தந்து வரைதல் தகுதியென்ப."
(நம்பி. 198)

இந்நம்பியகப் பொருள் ஏறத்தாழ கி. பி. 12-ம் நூற்றாண்டின் இறுதியில் செய்யப்பட்டது என்பது அறிஞர் கருத்து. இதனில் **'அருங் கலம்** கொடுத்து மணம் முடித்தல்' என்னும் வழக்கம் சூத்திர வாயிலாக வெளிப்படுத்தலும். இதற்கு முற்பட்ட இறையனார் அகப் பொருள் உரைவகையால் வெளிப்படுத்தலும் காண, இவ்வாழ்க்கையும், 'அருங் கலம்' என்னுந் தொடரையும் நினைவிற் கொண்டவராய்ப் புறநானூற்று உரையாசிரியர், கரிகாலன் மனைவியர் இழை களைந்தனர் என்னும் இடத்தில், ''அருங்கல அணி முதலவாகிய அணிகளை ஒழித்தார்,' எனப் பொருள் எழுதினார் என்று கொள்ளுதலே பொருத்தமுடையது. இவ்வுரை யாசிரியர்கள் இப்பன்னூல்களுக்குப் பிற்பட்ட வராதலின், தாம் பயின்ற இவற்றின் அறிவைக் கொண்டு சங்கச் செய்யுள்களுக்கு மேற்காட்டியவாறு உரை கூறினர்.

சங்க நூல்களும் தாலியும்

இதுகாறும் கூறப்பெற்ற அருங் கலமாகிய இழை அல்லது தொடி திருமணத்தின்போது கட்டப்படும் **தாலி அன்று** என்பது விளக்கப் பட்டது. 'இழைகளைந்தனர்', 'தொடிகளைந்தனர்' தொடி தகர்த்தல்' என்று பண்டை இலக்கியங்களில் தொடர்கள் வந்துள்ளனவே தவிர, 'தாலி களைந்தனர்' என்று யாண்டும் கூறப்படவில்லை. ஆனால், அச்சங்க நூல்களில் பல இடங்களில் 'தாலி' என்னும் சொல் சுட்டப் படாமல் இல்லை.

(1) ''தாலி களைந்தன்றும்
இலனே'' (புறம். 77)

பாண்டியன் நெடுஞ்செழியன் சேர சோழனையும், அவர்க்குத் துணையாக வந்த ஐம்பெரு வேளிரையும் தனியனாய் நின்று வென்று மீண்டபொழுது, இடைக்குன்றூர் கிழார் என்ற புலவர் அவன் இளமையுடையவன் என்பதைக் குறிக்க இங்ஙனம் கூறினர். அவர் கூறிய 'தாலி கண்ணேறு முதலியன (திருஷ்டி தோஷாதிகள்) தாக்காதிருக்கும் பொருட்டுக் குழந்தைகட்குத் திருமாலின் ஐந்து படைகளின் வடிவமாகச் செய்யப்பட்டு அணிவிக்கப்படுவது; ஆதலின் **'ஐம்படைத் தாலி'** எனப் பெயர் பெறும், '' பொன்னுடைத் தாலி என் மகன்'' (அகம். 54) என வருதலும் காண்க.

(2) ''புலிப்பல் தாலிப்புன்றலைச் சிறார்'' (புறம்—374)

இது வீரன் தான் கொன்ற புலியின் பற்களைத் துளைத்து மாலையாகச் செய்து தன் மக்களுக்கு அணிவிப்பது, வீரரல்லாத பிறரும் தங்கம், வெள்ளி இவற்றால் புலிப்பற்கள் செய்து கோத்து அணியும் நகையாகும்.

இப்புலிப் பல் தாலி ஆண் பிள்ளைகளே அன்றிப் பெண் பிள்ளைகளும் இளமை முதல் அணிவது மரபு. பருவமடைந்து களவொழுக்கத்தை மேற் கொண்டு தலைவனோடு உடன் போக்கு நடத்திய தலைவி இப்புலிபப்ல் தாலியை அணிந்திருந்ததை அவளது செவித் தாய் குறிக்கும் செய்யுள் ஒன்று அகநானூற்றில் வந்துள்ளது,

.'.........................பொன்னோடு
புலிப்பல் கோத்த புலம்பு
மணித் தாலி
....
கற்கெழு சிறுகுடிக் கானவன்
மகளே'') அகம்—7)

(3) வரிவெண் தாலி வலை
செத்து வெரூஉம் '' ஐங்குறுநூறு) ---166) என வரும் இடத்தில் தாலி என்பது பலகறையை (சோழியை) குறிக்கின்றது.

இவற்றால் ' தாலி ' என்னும் சொல் சங்க கால வழக்கில் இருந்த-தேனும், அச்சொல் அக்காலத் தமிழர் சமுதாயத்தில் மணமகன் ஒருவன் தான் மனைவியாக ஏற்கும் ஒருத்திக்குத் திருமணத்தின் போது கழுத்தில் கட்டும் தாலியைக் குறியாதது ஊன்றிக் கவனிக்கத்தக்கது,

★

அண்ணாவின் 'சீனவெடி'!

அறிஞர் அண்ணா அவர்களின் நகைச்சுவை ஒரு அலாதிச் சிறப்பு வாய்ந்தது. அதுவும் எப்போதாவது கோபத்தோடு சேர்ந்து வந்தால், விழுந்து விழுந்து சிரிக்காமல் இருக்க முடியாது!

ஒரு முறை அண்ணாவோடு, ஒரு தோழரும் நானும் ஒரு கூட்டத்தில் பேசினோம். அந்தக் கூட்டத்தில், அந்தத் தோழர் ஒரு காங்கிரஸ் தலைவரைப் பற்றிக் குறிப்பிட்டு, '' நமது அருமை நண்பர். நமக்கு ரொம்ப வேண்டியவர்'' என்று பலவாறாக, சிறப்பையெல்லாம் கூறிப்புகழ ஆரம்பித்து விட்டார். இத்தனைக்கும் அந்தக் காங்கிரஸ் தலைவர், இன்னும் தன்னைத் திராவிடன் என்றுகூட சொல்லிக்கொள்ளவில்லை.

கூட்டம் முடிந்ததும் அந்தத் தோழர், அண்ணாவிடம், '' ஏனண்ணா! நான் பேசியது சரிதானே!'' என்று கேட்டார். அண்ணாவுக்கு கோபம் வந்து விட்டது.

'' என்ன சரி! இன்னும் ஒரு வார்த்தைகூட-நம்து கருத்தில் ஒரு துளியைக்கூட ஒப்புக்கொள்ளவில்லை, அந்த காங்கிரஸ்காரர்! நீ பாட்டுக்குப் புகழ ஆரம்பித்து விட்டாய்! தெருவிலே போகிற ஒருவர் உன் மீது வெற்றிலை எச்சிலைத் துப்பிவிட்டுப் போகிறார்! நீ உடனே, '' ஆகா அவன் வெத்திலை ஏங்கிட்ட ஆப்பிட்டுகிடுச்சு! ஆப்பிட்டுகிடுச்சு! புடிச்சுட்டேன்! புடிச்சிட்டேன்! என்று குதிக்கிறாய்! என்றார்!

—கண்ணதாசன்

[10-ம் பக்கத் தொடர்ச்சி]

அதற்கு அவள், ''நம்மமகளைக் காணோம்!'' என்று கூறிவிட்டு ஓவென அழுகிறாள்.

இதைக் கேட்ட செவிலித் தாய், ''ஆ..மகளைக்காணோமா? வென்று கேட்டவாரே உள்ளே யெல்லாம் சென்று பார்க்கிறாள்-அவளால் வளர்க்கப்பட்ட மானைத்தவிர, அங்கொன்றும் காணாதநதைக் குறித்து, பெரிய ஏமாற்றம் கண்டவளாய் தன் தலைவியின் பக்கத்தில் உட்காருகிறாள்-அவளின் கண்களிலிருந்து, கரை புரண்டோடும் வெள்ளம்போல் கண்ணீர் வழிந்து கொண்டே இருக்கின்றது.

தலைவியைப் பெற்றெடுத்த நற்றாய் பெரிதும் வருத்தமுற்றவளாய், நேற்றுத் தன் மகள் காட்டிய குறிப்புகளைப் புரிந்து கொள்ளாமல் போய்விட்டேனே!'' என்று எண்ணியவாறு, அவளை அன்போடு வளர்த்த தன் தோழியிடம் நேற்று நடந்தவற்றை மெல்லக் கூப்பிட்டு உரைக்க முற்படுகிறாள்.

'' நேற்று மாலை நீ வெளியே சென்றிருந்தாய். நான் அவளை அன்போடு அழைத்து, கூந்தலில் தாழைப் பூவைச் சூட்டினேன். அப்போது அவள், தன்னுடைய மூலைக்கண்ணும், முத்துமாலையும் என் உடலில் அழுந்தும்படி அணைத்துக் கொண்டாள். என்றுமே இல்லாத அத்தகைய பரவசம் ஏன் என்பதை நான் உணரவில்லை; இப்போது உணருகிறேன்.

அழகே உருவான என் கண்மணி அவ்விதம் செய்த குறிப்பை, மான் கூட்டங்களெல்லாம் வேங்கைப் புலிக்கு அஞ்சியோடும் காட்டு வழியில் பிரிந்து செல்வதற்குத்தான் போலும்!

உனக்குநான் இழைத்ததீங்கு தான் என்ன? நேற்று இரவு கூட என்னோடு அன்புடன் உட்கார்ந்து நிலவொளி எத்தகைய அழகு கொண்டிருக்கிறது!' என்று கூறி என்னை இன்பத்தில் ஆழ்த்தினாயே!'' என்றெல்லாம் கூறியவாறு விம்மி விம்மி அழுதவாறு தூணோடு தூணாய்ச்சாய்ந்து, திசைத்தெரியாத கப்பலைப்போல், தன மகள் சென்ற வழித்தெரியாமல் மெய் மறந்து கிடக்கிறாள்.

இத்தகைய இனிமை யூட்டும் செய்யுள்கள் நாலடியாரின்கண் மலிந்து கிடக்கின்றது. தன் மகளின் குறிப்பை உணராத நற்றாய் வருந்துகின்றதை நாம் நோக்கும்போது நம்மையும் அந்தத் துயரத்துடன் அழைத்துச் செல்வதைத் தவிர்த்து வேறென்ன காண முடிகிறது! இவ்வித அழுகைக்கு நம்மை அழைத்துச் செல்லும் நாலடியாரை இனிது காண்போம்.

முலைக்கண்ணும் முத்தும்
முழுமெய்யும் புல்லும்
இலக்கணம் யாதும் அறி
யேன்—கலைக்கணம்
வேங்கை வெரூஉம் நெறி
செலிய போலுமென்
பூம்பாவை செய்த குறி.

—நாலடியார்-அதி-40

—வே. கபிலன்

இதோ தலைசிறந்த படங்கள்!

திருச்சி தஞ்சாவூருக்கு நாங்கள் விநியோகிக்கிறோம்

மதுரூஸ் பிக்சர்ஸ் :
சேந்தாமரை

கஸ்தூரி பிலிம்ஸ் :
மேனகா

பத்மினி பிக்சர்ஸ் :
முதல் தேதி

மற்றும்

கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி, சொர்க்கவாசல், நால்வர், பணம், ஆசைமகன், மாங்கல்யம், அம்மையப்பன்.

மற்றும் பல படங்கள்!

ராணி பிக்சர்ஸ்
திருச்சி.

அடுத்த இதழில் தாம்பரம் கிருத்துவக் கல்லூரியில் 28-10-54-ல் 'பாரதி' என்ற தலைப்பின்கீழும், 8-11-54-ல் மதுரைத் தியாகராயர் கல்லூரியில் 'மறுமலர்ச்சிக் கவிஞர்கள்' என்ற தலைப்பின் கீழும் கண்ணதாசன் நிகழ்த்திய இலக்கியச் சொற்பொழிவுகளின் சுருக்கம் வெளிவரும்.

தாயே ஆயினும்...!

—: கானா முத்துப்புலவர் :—

[இது ஷேக்ஸ்பியரின் 'ஹாம்லெட்'டைத் தழுவிய ஒரு சிறு ஓரங்க நாடகம்.]

[திரை தூக்குவதற்குமுன்......ஒலி]

திருத்தங்கல் நாட்டுமன்னன் ஜெயச்சந்திரன். அவன் மனைவி சித்ராங்கதை, அவள் தன் கணவன் ஜெயச்சந்திரனைக் கொன்று மைத்துனனைக் கணவனுக்கி, மகன் புவன வீரனைத் துரத்திவிட்டு அரியாசனத்தில் அமர்ந்தாள். சில ஆண்டுகள் செல்ல.........

[திரை தூக்கப்படுகிறது, அருமையான வேலைப்பாடு கொண்ட கண்ணுடி மாளிகையின் உள்ளே ஒரு கண்ணுடி சுவருக்குப்பின் சித்ராங்கதை நின்று பாடிக்கொண்டிருக்கிருள். 'சில்ஹவுட்'டில் அவள் உருவம். பாடிய வண்ணம் வெளிவருகிருள். யாரோ குதித்த சப்தம். திடுக்கிட்டுத் திரும்புகிருள். புவனன் நிற்கிருன்.]

சித்: ஆ !...யார் !

புவ: பார்! நன்ருகப் பார்! விழி பெயர்ந்து விழும்படி பார்! இறந்து போன உன் கணவனின் மகன் வந்திருக்கிறேன் என் மாஜி மாதாவே பார்!

சித்: ஆ புவனு! ஏன் வந்தாய்?

புவ: ஆம். வரக்கூடாதுதான்! அழைப்பில்லாமல் அரண்மனைக்குள் நுழைவது, அதுவும் அரண்மனையிலேயே இருந்தபோதும் அந்தப்புரத்திற்குள் நுழைவது தவறுதான்! தகாதுதான். ஆனுல் நான் சொல்ல வந்திருக்கும் செய்தி—நீ எங்கிருந்தாலும் வந்து உடனே சொல்ல வேண்டிய செய்தி! இதற்கு இடம் பார்த்து, நேரம் பார்த்து வரவேண்டியதில்லை.

சித்: சொல்லவேண்டியதை விரைவில் சொல்லிவிட்டு சீக்கிரம் போய்விடு! மீண்டும் வராதே!

புவ: சொல்லி விடுகிறேன்! போய் விடுகிறேன்! மீண்டும் வர மாட்டேன்! வந்தாலும்...என் மாஜி மாதாவே நீ இருக்க மாட்டாய்!

சித்: (ஆத்திரம்) புவனு?

புவ: சொல்லாதே! அந்தப் பெயரை மறுமுறை சொல்லாதே! பொங்கியெழுந்து பூரித்து வரும் அன்பு வெள்ளத்திலே என் தந்தை அடிக்கடி அழைத்த அந்த வார்த்தையை! ஏ சேற்றில் புரளும் சீர்கெட்டவளே! உன் நாற்றம் பிடித்த வாயால் சொல்லாதே! தோள் தடவி, முகந்தடவி தொட்டு விளையாடி வாளெடுத்துப் பயிற்சி தந்த மாவீரன் வைத்த பெயரை, நெறியற்ற பிண்டமே! நீ சொல்லாதே! பகைவனே என்று கூப்பிடு! பழி தீர்க்க வந்தவனே என்று அழை!

சித்: புவனு! திமிர்பிடித்த நாக்கோடு பேசுகிருய்!

புவ: கொழுப்பெடுத்து நீ செய்த காரியத்தை திமிர் பிடித்த நாக்காலேதான் சொல்ல வேண்டும்! கேள்! அன்பே உருவான என் தந்தையை-உன் கணவனை-கொலை செய்தாய் நீ! உன் காமக் களியாட்டம் தங்கு தடையின்றி நடைபெற, கட்டிய கணவனை வெட்டி வீழ்த்தினுய்! அதற்குத் துணை சேர்ந்தான் என் சிற்றப்பன்; உன் நிகழ்காலக் கணவன். மானமிழந்த,மாதே! மதியிழந்த மாதாவே, (கையைப்பிடித்து இழுத்து) பார்! இந்தப் படத்தைப் பார்! இறந்து போன உன் கணவரிவர்! நன்ருகப்பார்! புன்னகை ததும்பும் இதழைப் பார்! போர்க்குணம் காட்டும் முகத்தைப் பார்! கதிரைப் பழிக்கும் நெற்றியைப்பார்! கலங்கரை தோற்கும் விழியைப்பார்! இல்லையெனும் சொல்லறியா எழில் வாயின் அழகைப் பார்! இதயங் காட்டும் கண்ணுடி முகம் என்ருல் முகத்திலேயே இதயம் தெரிகிறது பார்!

(கையைப் பிடித்து மறுபக்கம் இழுத்து)

இப்போது இந்தப் படத்தைப் பார்! போதை வழியும் முகம் இங்கே! சூழ்ச்சியைக் காட்டும் விழிகள் இதோ! நிலை குலைந்த மாதாவே! ஸ்திரிஜாதியின் கள்ளச்சின்னமே! இதை நீ காதல் என்று சொல்ல முடியாது! உன் வயதை நினைத்துப் பார்த்தால் உனக்கு மானம் தான் இல்லையென்ருல் விழியுமா இல்லை?

அரசு கட்டிலிலே அண்ணன் இருந்தான். அபகரிக்க நினைத்தான் தம்பி! முரசு கொட்டி போருக்கழைத்தானு? முறைப்படியாவது களத்துக்கு வந்தானு? பின்புறமிருந்து தாக்கினுன். பேடிமையால் வெற்றி பெற்ருன்!

தாயே! உனக்குக் கண்ணும் குருடென்ருல் கருத்துமா அடைபட்டது!

அந்த நாளிலே...என் சின்னஞ் சிறிய பருவத்திலே, நீயும் என் தந்தையும் மகிழ்ந்திருந்த காலத்திலே நடந்ததெல்லாம் நீ எவ்வளவு விரைவில் மறந்து விட்டாய்!

பாசந்ததும்ப அவர் தலை வருடிய கைகள் இதோ! அன்பு சுரக்க காதல் மொழிந்த இதழ்கள் இதோ! ஆசை பெருக அவர் முகம் நோக்கும் விழிகள் இதோ! அருந்து விழவில்லை அந்த அங்கங்கள்!

கையெடுத்து நீ வருடியபோது அதில் நஞ்சிருந்ததை அவர் அறிவாரா? காதல் பேசி நீ துவண்டபோது அது வேஷமென்பதை அறிவாரா! ஆசையோடு நீ பார்த்தபோது அது வேசியின் பார்வை என அவர் நினைத்தாரா!

சித்: வேசி!

புவ: ஆம்! ஆச்சரியமாயிருக்கிறதா! உண்மையைச் சொன்னுல் ஆச்சரியப்படுகிருய்! வேசி நீ! விபசாரி நீ! பெற்ற மகன்தான் சொல்லுகிறேன். வீதியிலே திரிபவளும் வேசிதான்! நீயும் வேசிதான்! ஆனுல் ஒரு வித்தியாசம்! அதைக் காட்டிலும் இதற்கு விலை அதிகம்!

சித்: அடப்பாவி!

புவ: பாவி நூறு முறை சொல்! நான் பாவிதான்! நான் செய்த பாவத்திலெல்லாம் பெரிய பாவம் உனக்கு மகனுகப் பிறந்தேனே அது தான்! அந்தப் பாவத்துக்குத் தான் இப்போது பிராயச்சித்தம் செய்து கொள்ளப் போகிறேன்!...

(வாளை உருவுகிருன்! பின்னுலிருந்து ஹா! ஹா! என்ருெரு சப்தம்! திரும்பிப் பார்க்கிருன்)

(சிற்றப்பன் நிற்கிருன். உடனே.........)

புவ: ஹா! ஹா! வாரும் என் தந்தையின் மனைவிக்குக் கணவரே! வாரும்! செந்துரைப் போரிலே தலைகளை அள்ளிச் சொருகிவந்த என் வீரவாள் ஒரு இறையோடு உரை புகுமோ என்றஞ்சினேன். இல்லை! நீயும் வந்து விட்டாய்! மடிந்துபோ! மதோன்மத்தனே மடிந்துபோ!

(கொல்லுதல்—பின் தாயிடம்)

தாயே! கடைசி முறையாக உன் இஷ்ட தெய்வத்தை வணங்கிக் கொள்! உன் காம நடனத்தில் மங்களம் பாடும் கட்டம் வந்து விட்டது! நீயும் மடியப்போகிருய்! நீ மடிந்ததும், உன் கால் பட்ட இடங்களிலெல்லாம் காவிரிப்பூம் பட்டிணத்து மண்ணெடுத்துத் தூவி, கரை நீக்கச் செய்கிறேன்! மடிந்துபோ. (கொல்லுதல்)

சாகச் சென்றவர்கள்!

—: ஏ. கே. வில்வம் :—

நடமாடும் கவிஞர் உலகின் நகை பூக்கும் இலக்கியப் பூங்கா அவன் கவிதைகள் : அழகுச் சொற்களை அமுதப் பாடலாக்கி இயற்கையன்னையின் கழுத்திற்கு முத்தார மாக்கி இருக்கிருன். ஒன்ரு இரண்டா? அப்பப்பா ; ஏராளம்! எண்ணி லடங்காப் பாமாலைகள் — எல்லாம் இலக்கியத் தேன் உதிர்க்கும் பூமாலைகள்! அவன் கவிதைகளில் - உணர்ச்சி அலைமோதும்; அழகு கரை புரளும், எண்ணங்கள் எல்லாம் உயர் வானைத் தொட்டு விடும். அவன் கவிதையின் சிற கொலி கேட்டு மயங்காதோர் இலர்; தன்னை மறந்தோர் பலர்! அவன் கவிதைப் படைப்பின் சுடர் விழிகள் பழமைக் கோட்டையின் இருளைத் தாக்கிற்று. இதனுல் அந்த முகாமில் இருந்து எதிர்க்கவும் செய்தனர் சிலர்.

மாலை வந்ததும் மாதா கோவில் மணியடிப்பார்: 'மக்களேவாருங்கள்- செய்த குற்றங்களுக்கு மன்னிப்பும். இனி செய்யாதிருக்கும்மனப்பண்பும் பெற — பர மண்டலத்துப் பிதாவிடம் மன்னிப்புக் கேளுங்கள்- மன மாசை துடையுங்கள்' என்று அந்த மணியோசை மக்களிடம் கூறுவது போல் இருக்கும்; மணியொலி கேட்டதும் மக்கள் கூட்டம் அணி வகுத்துச் செல்லும், மாதாகோவிலை நோக்கி . . . பட்டும் பளபளப்பான ஆடைகளும் பரிமளம் வீசிடும் வாசனைப் பொருள்களையும் பூசிக் கொண்டு மக்கள் அழகு நடை போட்டுச் செல்வர் ஆண்டவன் அடிதொழ. அப்பொழுதெல்லாம் இந்த கவிஞன் நீல வானத்தையும் - கோலஞ் செய்கின்ற குளிர் சோலையையும் அலை கடலின் பெரு மூச்சையும் - அருவியின் ஓட்டத்தையும் பற்றி வர்ணித்துக் கொண்டிருப்பான்; அதோடு மட்டுமல்ல - அணிவகுத்து ஆலயத்திற்குச் செல்லும் மக்களை பார்த்து அலட்சியச் சிரிப்பொன்று அவன் இதழ்களில் வெடித்து சிதறும்; கொலைக் கூடம் நோக்கிச் செல்லும் செம்மறி ஆடுகள்.' அவன் வாய் இப்படி முணு முணுக்கும்.

வானத்து நிலப் பட்டைக் கிழித்து விட்டு மெள்ள எட்டிப் பார்க்கும் தங்க நிலா ; உடனே கவிஞன் உணர்ச்சி வயப்படுவான் - முற்றிய நிலவின்வைரச் சிரிப்புஅவனை வெறியனுக்கி விடும் ; 'ஓ! ஒளிப் பிழம்பே! உன்னிடம் அழகு இருக்கிறது; என்னிடம் இல்லை ! என்னிடம் களங்கம் இல்லை - உன்னிடம் அது இருக்கிறது ! அழகுத் திரையிட்டு நீ உன்னிடமுள்ள களங்கத்தை மறைக்க முயல்கிருய் - தோற்றுப் போனுய்! ஜோதிச் சுடரே! உன் மனதில் களங்கம் இருப்பதால் தான் நீ தேய்கிருய். வளர்கிருய் - என்னிடம் களங்கமில்லை - அதனுல் நான் தேய்வதில்லை - வளர்கிறேன் ... ஆனுல் ... நான் ஒருநாள் அழிந்து போவேன், என் இதயம் உன் அழகிலே இப்பொழுது சிக்கிக் கொண்டதைப் போல......என் உடலும் ஒரு நாள் இந்த மண்ணில் புதைந்து அழிந்து போகும்......'என்று கூறிவிட்டு மெள்ள நடப்பான்.'

'இரவின்இதயத்தைப் பிளந்து நீ வெளிக் கிளம்புவதைப் போல . . ஓ! தங்கக் கலசமே! நானும் பழமை இருளைக் கிழித்து உலகைப் பார்ப்பேன் ... உரத்த குரலில் பாடுவேன்'

அலைப் பேச்சால் மகிழ்விக்கும் ஆற்றோரம் போவான் - உற்று நோக்குவான்-'அலைகளே நீங்களும் கரைகளுக்குக் கட்டுப்பட விரும்பவில்லை. அதனுல் தான் இப்படித் துள்ளிக் குதிக்கிறீர்கள் - என் இதய அலைகளும் எந்த சக்திக்கும் கட்டுப்பட மறுக்கின்றன. நானும் அலைகிறேன்'

'மண்ணில் பிறந்தவனெல்லாம்- இறக்கிருன் - அதோடு உலகை விட்டு மறைகிருன் ; நானும் இறப்பேன், ஆனுல் உலகம் என்னை மறக்காது!'

'உலகின் புகழுக்கு நான் என்றென்றும் பாத்திரமாவேன் ; ஒவ்வொருவரின் இதயத்திலும் ஒளி விடும் விளக்காவேன் ; என் சாகாத கவிதைகள் நான் செத்த பின்பும் என்னை வாழ வைக்கும்! என் உணர்ச்சிக் கவிதைகளே — என் அறிவின் குழந்தைகளே - நீங்கள் வாழ்க! ... என்னை உலகம் ஏன் இப்பொழுதே பாராட்டவில்லை? சே! தவருன ஆசை ! இல்லாவிட்டால் இந்த உலகத்திற்கு என்னை உணர்ந்து கொள்ளும் அறிவு இன்னும் வரவில்லை போலும்! நான் சாவேன்! ஆமாம்! செத்த பிறகு சமாதி எழுப்புவார்கள் உற்ருர்-உறவினர்! கூடாது கூடாது .. என் முன்னேற்றத்திற்கு அவர்கள் தான் முட்டுக்கட்டை ; அவர்கள் நான் செத்த பிறகும் என்னை நெருங்க வேண்டாம்.; அவர்களின் முதலைக்

(அடுத்த பக்கம் பார்க்க)

(முன் பக்கத் தொடர்ச்சி)

சாகச் சென்றவர்கள் ...

கண்ணீர் என் கல்லறையை களங்கப் படுத்தவே வேண்டாம் ; என் சமாதியின் மேல் — மக்கள் தூவும் மென் மலர்கள் தரும் இன்பம் - ஆகா ! குவிர்ச்சி நிரைந்தது ... என்னை வெறுப்பவர்கள் . . நல்லவர்கள் ! நான் அழிந்த பிறகு என் குழந்தைகளை (கவிதைகள்)அணைத்துக் கொள்வார்கள் - உச்சிமோர்ந்து முத்தமிடுவார்கள் ! பகிரங்கமாக செய்யா விட்டாலும் - திருட்டுத் தனமாக வந்தாவது . . நிச்சயம் முத்தமிடுவார்கள் . . ஏனென்றால் என் படைப்புகளில் — அழகு மிதக்கிறது . ' அழகின் காதலன் நான் அதோடு இணைந்து போகிறேன் . . இப்படி யேதேதோ பேசினன் . . அயர்ந்து போனன் . . அந்த மணற் பரப்பில் சாய்ந்து உரங்கியும் விட்டான் ;

நள்ளிரவு - முழு நிலவின் மஞ்சள் மழையால் அந்த மணற் பரப்பு தங்க பஞ்சணையாகி விட்டது ; அதையாகத்தூங்கிக் கொண்டிருந்த அந்த கவிஞன் திடுகிட்டு எழுந்தான் அவன் முகத்தில் எண்ணக் கிரல்கள் மின்னலிட்டன ; ஆ ! நான் தனி மனிதன் - உலகம் என்னை வெறுக்கிறது ... இல்லை ! இல்லை ! உலகின்றி நான் வாழ முடியாது அதோ - அந்த கிளையில் இரண்டு பறவைகள் ! ஆம் ! ஒன்று ஆண் ! மற்றொன்று பெண் ! உடலோடு உடல் தைத்தது போல ! ஆனல் நான் ஏன் தனியாக இருக்க வேண்டும்! பறவைகள் வாழக் கற்றுக்கொண்டிருக்கிறது..அதோ அமைதியாக வாழ்கிறது ... நான் ஏன் தனியாக இருக்க வேண்டும். எங்கே என் மணிப் புறு ... என் மனக் கோவிலின் மாணிக்கதீபம் எங்கே ? அணைந்து விட்டதா ; இல்லையே ... பிறிந்திருக்கிறேன் ; என் பாசத்திற்குரியவளைவிட்டு வெகு தூரத்தில் நிற்கிறேன் ; அந்த தீபத்தின் காதல் சுடர் அலைந்து கொண்டிருக்கும் ; ஐயோ ! அவள் என் காதலி! ஆனல் நேற்று என்னுடன் சண்டை போட்டாளே ! அலட்சியமாக பேசி என் கவிதைகளை இகழ்ந்தாளே - எப்பொழுதும் கவிதைகளையே கட்டிக் கொண்டு அழுகிறேன்— அவளை முத்தமிடு வதில்லை என்று குற்றம் சாட்டினளே . . சே ! சே ! அவளுடனு வாழ்வது இனிமேல் ! வேண்டாம். என் கொள்கைகள் பிடிக்காதவளுடன் நான் வாழ்க்கை நடத்த வேண்டாம் ; என் இதயமே என்னை புறக்கணிப்பதா - புகழ் வேண்டும் அவ்வளவு தானே ! உலகம் நான் செத்த பிறகு புகழ் மாலை சூட்டும் எனக்கு ; அது போதும் ! பிறகேன் நான் வாழ வேண்டும் ; ஒளி இல்லா மாளிகை நிலவில்லா வானம் .. பெண் இல்லா வாழ்வு . . இனி எனக்கு வாழ் வில்லை சாவு தான் ; இப்படி யெல்லாம் கூறி விட்டு வெறி கொண்ட பித்தன் போல் ஓடினன் அந்தக் கவிஞன் ; புரண்டோடும் அந்த காட்டாற்றின் விளிம்பிற்கே ஓடி விட்டான். அந்த காட்டாற்றில் விழுந்து சாவதென்ற இறுதி முடிவுடன், அந்த ஆற்றில் ஒரு காலடியும் வைத்து விட்டான்.

திடுக்கிட்டான் கவிஞன் ; வைத்த காலடியை எடுத்துக் கொண்டான் ; இவன் நிலையிலேயே எதிர் கரையில் ஒரு பெண் ; அவளும் வாழ்க்கையில் வெறுப்பு கொண்டவளோ ! கவிஞன் அவளைப் பார்த்தான், அவளும் இவனைப் பார்த்தாள் ! இரண்டு வினடி அமைதி ; அந்த நிர்மலமான இரவு நேரத்தில் அடடா ! அற்புதமான காட்சி !

அந்த பெரும் அமைதியைக் கிழித்துக் கொண்டு ஒரு அலறல்—

' ' அன்பே — சலோமி ' ' ... உணர்ச்சிப் பெருக்கால்கூவிவிட்டான் கவிஞன்.

' ' இதயமே .. இங்கா இருக்கிறீர்கள் ' இப்படி அந்தப் பெண்ணின் பாசக்குரல் ; கவிஞனுக்குக் காதல் கீதமாகக் கேட்டது ;

இனி பொறுப்பதில்லை இருவர் மனமும், ஓடையின் குறுக்கே போடப்பட்டிருந்த மரத் துண்டின் மேல் நடந்து எதிர்க்கரையை அடைந்தான் ; இருகத் தழுவிக் கொண்டான்; இருவரும் உணர்ச்சிப் பதுமைகளாகி விட்டனர் ; ஆர்வத்தோடு கவிஞன் உதடுகளை அவள் இதழ்களில் பதித்தான், மறுப்பில்லை— அவளிடம் இருந்து ஒரு மறு மதிப்பும் கிடைத்தது ;

சாவின் விளிம்பிலே என் மணிக் கிளியே ! உன்னை சந்தித்தேன் . . கவிஞன் சொன்னன் ; இப்படி...!

'நேற்று நடந்த குற்றங்களை மன்னிப்பீர்களா என்ருள் ' - அந்த மங்கை '

குற்றமா ? நேற்று ? எனக்கொன்றுமே நினைவில்லையே ... சிவந்த ரோஜாவின் சிரிப்பையல்லா பார்க்கிறேன் ; திறந்த அழகை யல்லவா ரசித்துக் கொண்டிருக்கிறேன் என்று கூறி அவன் அவள் நிலா முகத்தை மலர்க் கரங்களால் அணைத்து உயர்த்தினன் ; நான்கு உதடுகள் ஒன்றை ஒன்று நெருங்க துடித்துக் கொண்டிருந்தன ; இடைவெளிகுறைந்து கொண்டிருந்தது; அவள் கன்ன பாடியகாதல்பாட்டில் கட்டுண்டான் ; கலையுண்டாள்; பண்பாடும் தென்றல் அந்த காதல் காட்சியை பார்த்து மென் மூச்சு விட்ட படியே மெள்ளப் பறந்தது ; கவிஞன் உலகை மறந்தான். தன் இதயம் நிறைந்தவளின் மேனி யெங்கும் முத்தம் ! பொழிந்து கொண்டிருந்தான் . . . , .

சாகச் சென்றவர்கள் ... வாழத் திரும்பினர்கள் !

[ஒரு ஆங்கிலக் கவிதையின் தழுவல்]

★

யோக்கியதை உண்டா ?

அமெரிக்காவிலே, ஓர் அரசியல் கட்சியின் அபேட்சகராகத் தேர்தலுக்கு நிற்க ஒருவர் விரும்பினர்.

அவரிடம் கட்சி காரியதரிசி இவ்வாறு கூறினர் : ' ' 900 பவுன், தேர்தல் செலவுகளுக்காகக் கட்ட வேண்டும். 500 பவுன், சங்கத்துக்கு நன்கொடை யளிக்க வேண்டும். 200பவுன்,உள்ளூர்த்தர்மங்களுக்கு ஆண்டுதோறும் அளிக்கவேண்டும். இதற்கெல்லாம் சம்மதித்தீர்களானல், எங்கள் கட்சி அபேட்சகராயிருக்க உங்களுக்குத் தகுதி உண்டு என்று தீர்மானிப்போம்.''

வந்தவரின் பதிலாவது:''இதெல்லாம் சரிதான். ஆனல், என்னை அபேட்சகராய்ப் பெற உங்கள் கட்சிகுத் தகுதி உண்டா என்று முடிவு வேண்டாமா ? இல்லை என் பதே என் முடிவு.''

இவனன்றே கவிஞன்

தலைமகனும், தலைமகளும் எதிர்பாராதவிதமாக சந்திக்கின்றனர். அவர்களிடையே நாளடைவில் அன்பு வளர்ந்து இறுதியில் இயற்கைப் புணர்ச்சியில் திளைத்து, தன்னை மறந்து அவளின் கூந்தலில் சூட்டப்பெற்றிருந்த தாழை மலரை முகர்கிறான் அவன். அவ்வேளையில் தன்னை மறந்து கனத்த குழை அணிந்த நங்காய் ! உன்னைக் கண்டால் 'ஆய்மயில் கொல்லோ' வென்ற சந்தேகம் எழுகின்றது. அதுமட்டுமல்ல, என்னை வருத்தக்கூடிய குவளையொத்த கருவிழிகளை எங்ஙனம் பெற்ருய் என்பதை, உன்னையே கேட்டுத் தெரிந்துகொள்ளஎன் மனம் துடியாய்த் துடிக்கின்றது ! செந்தாமரை நிறத்தழகி! மாதுளை போன்ற உதடுகளை என்றென்றும் உன்னைப் பக்கத்திலே நிறுத்திப் பார்க்க போகிறேனே தெரியவில்லை என்று தன்னை மறந்து பலவாராகப் பிதற்றுகிருன்.

பால் போன்றநில வொளியில் பைத்தியம் பிடித்தவன்போல் பிதற்றுகின்ற தலைவனின் சொற்களைக் கேட்டு மதி மயங்கியவளாய், அவனை மார்போடு மார்பாய்த்தழுவிக்கொள்கிருள். சிறிது நேரத்திற்கெல்லாம் மிகத்துயரத்தோடு காலத்தின் சூழ்நிலையால் இருவரும் பிரிகின்றனர்.

நாட்கள் பல கழிகின்றன. அவர்களின் காதல் வளர்பிறை போல் வளர்ந்து, முழுமதிபோல் தோன்றுகிறது. ' இரவென்றும் பகலென்றும் பாராது கூடுவது பிறர் கண்களுக்குத் தெரிந்தால்?' என்ற கேள்வி, அத் தலைமகனிடையே ஒருநாள் எழுகின்றது. களவொழுக்கத்திலேயே ஈடுபட்டிருந்தால் என்றைக்கேனும் ஆபத்துதான் ! என்பதை தெரிந்துகொண்டவனய், ஏற்கெனவே சந்தித்த இடத்திற்கு வந்தான், தலைவியும்சில நிமிடத்திற் கெல்லாம் அங்கு வருகிருள். தன் உள் எக்கிடக்கையை அவளுக்கு உணர்த்துகிருன். இசைந்து விடுகிருள். தலைவனும் அகமகிழ்ந்தவனய் ! கண்ணே ! நாளை இரவு இங்கு வந்துவிடு ; நானும் வந்து விடுகிறேன்'' என்று கூறி, அவளின் செந்தாமரைப் போன்ற சிவந்த கன்னங்களை வருடியவாறு, வருகிறேன்!' என்று விடைபெற்றுச் செல்கிருன். அவளும், அகமகிழ்ச்சியோடு தம் குடிசையை நோக்கிச் செல்கிருள்.

மறுநாள் மாலை தனது அன்னையுடன் மகிழ்ச்சியோடு விளையாடுகிருள். அவளின் பேச்சு ஒருவிதக் குறிப்பை உணர்த்துவதாக அமைந்திருக்கிறது. உண்மையை உணர முடியாத அவளின் பேச்சு ஒருவிதக் குறிப்பை உணர்த்துவதாக அமைந்திருக்கிறது. உண்மையை உணர முடியாத அவளின்அன்னைஅவளை அணைத்து முத்தமிட்டு உச்சி முகர்ந்து, முல்லை மலரை அவளின் கூந்தலில் சொருகுகிருள். எதிர் வீட்டிலிருந்த அவளின் தோழியும் ஓடோடி வந்து, அவளோடு கொஞ்சிக் குலவி விளையாடுகிருள். தோழிக்குத் தன் தலைவியின் செய்தி தெரிந்திருந்தமையால், 'ஏடி ! இதோடு உன்னை எப்போது காணப்போகிறேனே ! வென்று தலைவியின அன்னையைப் பார்க்காமல் கூறுகிருய்.

தன் தோழியின் வார்த்தையைக் கேட்ட தலைவி அச்சத்தோடு, '' ஏன்! நீ விரும்பினல் என்னை எப்போதும் பார்க்க முடியாதென்ரு கருதுகிருய்?'' என்று கூறியவளாய், தன் அன்னை இருப்பதைக் கண்ணிமையால் அறிவிக்கிருள்.

தன் குறிப்பறிந்த தோழி, ' அதற்கில்லடி ! வீட்டிலே வேலை அதிகம் என் செய்வது? என் அன்னைக்கோ உடல் நலம் கிடையாது. ஆகவே எல்லா வேலைகளையும் நானே பார்த்துக் கொள்ளவேண்டி இருப்பதால் கூறினேன் !'' என்று கூறி உண்மையை மறைத்தாள். அவளும் உயிர்த் தப்பித்தவளாய் இரவை நோக்கி தவம் கிடக்கிருள் ; அவளின் தவத்திற்கு வரமளிக்க திங்களோன் கிளம்புகிருன். ஊர் முழுதும் அமைதி உண்டாகிறது. காலையிலிருந்து மாலைவரையில் அயராது பாடுபட்ட உழவர்கள் முதற்கொண்டு மாடுகளை மேய்த்து வீடு திரும்புபவன் வரையில், கொண்டிருந்த அயர்வைத் தீர்த்துக்கொள்ள உறங்கிக் கொண்டிருந்தனர். இரை தேடிச் சென்றிருந்த பறவைகளெல்லாம் அமைதியோடு தம் தம் கூட்டில் புகுந்து தன் குஞ்சுகளோடு நித்திரை செய்துகொண்டிருந்தன. நள்ளிரவில் புறப்பட்டு வெளியேறுகிருள். தலைவனுடன் சேர்ந்து புறப்படுகின்றனர்.

பொழுது விடிகிறது. தலைவியின் தாய், தன் மகளை எழுப்பச் செல்கிருள். அங்கு தன் மகளைக் காணுததைக் குறித்து 'அய்யோ! என் கண்மணியை காணேமே !' என்று அலறித் துடித்தவாறு வெளிப்புறத்தற்கு வருகிருள். அவளின் குரலொலியைக் கேட்ட தலைவியின் வளர்ப்புத்தாய் 'என்னயென்ன !' வென்று மிக பரபரப்போடு கேட்கிருள்.

(8-ம் பக்கம் பார்க்க)



பொ. ரா. இராதா கிருட்டிணன், சென்னை-1

"வால்மீகி எழுதிய ராம காதையை, தக்க வடமொழி வல்லுனர்களைக்கொண்டு படித்து ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிருர் ம. பொ. சி. வால்மீகி ராமாயணத்தைப் படித்து, பிறகு கம்ப ராமாயணத்தையும் ஆராய்ந்து, எதிர்ப்பாளர்களுக்குதக்க முறையில் ஆதாரங்களுடன் தர்க்கரீதியாகப்பதில் சொல்ல ம.பொ.சி. பொது மேடைக்கு வரப்போகிருர்" என்று ஒரு பத்திரிகை எழுதியுள்ளதே; இது பற்றி உங்கள் கருத்து என்ன?

வால்மீகி ராமாயணத்தை வடமொழி வல்லுநர்களைக் கொண்டு படித்து-அதேபோலகம்பராமாயணத்தையும், தக்க தமிழ்மொழி வல்லுநர்களைக் கொண்டுபடித்து. .என்று திருத்திக் கொள்ளவும்! "பொது மேடைக்கு தர்க்கரீதியாகப் பதில் கூற வரப் போகிருர்" என்பதைக் கேட்க மகிழ்வு ஏற்படுகிறது. அப்படி அவர் செய்வாராளுல்-தர்க்கரீதியாக அவர் செய்யப்போகிற முதல் காரியம் அதுதான்!

என். ஆர். சந்திரன், வடசேரி

பெண்களுக்குச் சமத்துவம் அளிப்பது எது?

சொத்துரிமை!

மனிதனுக்குக் கடைசிவரை அலுத்துப்போகாதது எது?

குளிப்பது; சாப்பிடுவது; தூங்குவது!

நிலவும் மேகமும் தழுவிக்கொள்வதை எதற்கு ஒப்பிடலாம்?

நிலவும் மேகமும் தழுவுவதாகச் சொல்லுவதே இலக்கியம் - விஞ்ஞானம் இரண்டுக்கும் புறம்பாகும்!

'வெள்ளாட்டி' என்பதன் பொருள் என்ன?

'வைப்பாட்டி' என்று சுலபமாகக் கூறிவிடலாம். அதன் உட்கருத்தை ஆராய்ந்தால், வெறும் சிற்றின்பத்திற்குமட்டுமே பயன்படக்கூடிய-கணவனின் சுகதுக்கங்களில் பங்கு கொள்ளத் தேவையில்லாத ஒரு பெண் என விரியும். மற்ற பணிப்பெண்கள் வேறு வேலைகளைக் கவனிப்பதைப் போல், சிற்றின்பப் பணியை மட்டும் புரிய வேண்டிய பணிப்பெண், வெள்ளாட்டி என்பவள்.

ஜி. வெங்கடேசன், சைதாப்பேட்டை, வேலூர்.

'சங்கம்' என்றசொல்வடமொழிச் சொல்லா? இல்லையெனில், இப்போது பதிப்பிக்கப்பட்ட தொல்காப்பியத்தில், கீழ்க்கண்டவாறு சூத்திரம் உளதே, ஏன்? எடுத்துக் காட்டுகளுடன் விளக்கம் தருக:

சூத்திரம்:

"சதபம எனுமாவைந் தெழுத்தும்
எல்லா உயிரொடுஞ் செல்லுமார் முதலே
சகரக் கிளவியும் அவற்ரேரற்றே
அஐஔ எனும் மூன்றலங் கடையே"

தமிழ் மொழியின் முதற்பருவத்தில் உள்ள சொற்கள் பெரும்பாலும் ஓரசையின என்றும், அங்ஙனம் தமிழுக்குள்ள சொற்கள் அதிகம் இல்லை என்றும், ஒவ்வொரு சொல்லினின்றும் பல சொற்கள் பெருகின என்றும், 'தமிழ்மொழி அமைப்புற்ற வரலாறு' என்னும் நூலில் 'ஞானப்பிரகாசர்' விளக்கியுள்ளார். நீங்கள் குறிப்பிட்ட தொல்காப்பியச் சூத்திரத்தினின்று, ச, சௌ முதல் மொழிகள் வழங்கவில்லை என்பதே தெரிகிறது. 'சகரக்கிளவி' எனும், சூத்திரத்தின் இரண்டாம் அடி, "அஐஔவெனும் மூன்றலங் கடையே" என்று இருக்க வேண்டும் என்றும், அது எப்படியோ," அஐஔவெனும் மூன்றலங்கடையே'என்றுதிருத்தப்பட்டதென்றும் பழைய செய்கண்டான் பத்திரிகையில் அடைக்கலம் பிள்ளை என்னும் ஆராய்ச்சியாளர் கூறியுள்ளார். எப்படியோ, 'ச' முதல் எழுத்தாக, தமிழில் இரண்டாயிரத்துக்கு மேற்பட்டசொற்கள்காணக்கிடக்கின்றன. 'சங்கம்' எனும் சொல் நீண்டகாலமாக வழங்கப்படுவதால், அது தமிழா வடமொழியா என்கிற நீங்கா மயக்கம் ஏற்பட்டிருக்கிறது. ச, சௌ, முதன் மொழி பற்றிய இதே கருத்தைத்தான், ந. சி. கந்தையா பிள்ளை போன்ற திராவிட நூல் வல்லுநர்கள் கூறிப் போந்தார்கள். கந்தையா பிள்ளையின் முடிவே என் முடிபும்! ச, சௌ முதன்மொழியாக, தமிழின் ஆரம்பகாலத்தில் சொற்கள் இல்லாமலிருந்து, பின் தமிழிலேயே அது உற்பத்தியாகியிருக்க வேண்டும். சங்கமும் அதனடியாகப் பிறந்த தமிழ்ச் சொல்லே என முடிபு கட்டுவதில் தவறில்லை...

என். ஜான் ஜோசப் இருதயசாமி, பாளையங்கோட்டை.

கோப்பெருஞ்சோழன் இறப்பதற்கு முன்னுலே பிசிராந்தையார் அவரைச் சந்தித்தாரா? இறந்த பிறகு வந்தாரா?

இதுதான் சரி என முடிபு கட்ட, இந்த இருவர் விஷயத்தில் சரியான சான்று இல்லை என்றே, எனக்குத் தெரிந்த வரையில்-தோன்றுகிறது. நட்புக்கு இலக்கணமாக அவர்கள் வாழ்ந்திருப்பதால், சாகு முன் கண்டார் எனக் கொள்ளலாம். தோழர் ரா. பி. சே.யின் முடிபு, எந்த அடிப்படையில் எழுந்தது என எனக்குத் தெரியாததால், என் யூகம் அன்பு கணபதியின் முடிவை ஆதரிக்கிறது.

செல்வமணி, சென்னை-6.

சமீபத்தில் வெளிவந்த, 'கல்கி திபாவளி மல'ரில் "மயில் விழி மான்' என்றதலைப்பில், இராவணன் தமிழர்களைக் கொன்று தின்று வாழும் இராக்கதனுக வரையப் பெற்றிருக்கிறதே; இதன் பொருள் என்ன?

இராவணன், பூணூல் அணிந்த பார்ப்பனன் என்று சில 'ஆராய்ச்சியாளர்'கள் கூறுகிருர்களே, அந்த அடிப்படையில் இந்தக் கருத்து வரையப் பெற்றிருக்கலாம்! முதலில், அந்தக் கதையின் தலைப்பே, 'மயங்கவைத்தல்' என்னும் இலக்கியக் குற்றத்திற்கு இலக்காகும்!

பி. நடேசன், வண்ணை, சென்னை.

'மனிதன்' எனப்படும் பத்திரிகையில், அதன் ஆசிரியர் முதல் இதழை சமர்ப்பிக்கும்போது, "என்னை மனிதனுக்கிய கல்கி ஆசிரியர்" என்று குறிப்பிடுகிருரே, இவர் மனிதன் ஆவதற்கு முன் என்னவாக இருந்தார்?

"குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன்" என்ற டார்வின் தத்துவம், சமீபத்தில் பாட்டாகப் பரிணமித்திருக்கிறது, ஒரு படத்தில். அந்த ஆசிரியருக்குப் பூர்வ நினைவு அடிக்கடி வரும் போலிருக்கிறது! அவரை இனிமேல்-அவரது கருத்துப்படி-"தோழர் மாஜி குரங்கு" என அழைக்கலாம்!

ஷேக்ஸ்பியரை, 'செகப்பிரியர்' என்றும், 'சாக்ரடீ'ஸை 'சோக்ரதர்' என்றும் தமிழ்ப்படுத்துவதைப் பற்றித் தங்கள் கருத்து என்ன?

'சகிக்க முடியாத மடத்தனம்' என்று கூறலாம்!

நவம்பர் 21-ந் தேதி வெளி வருகிறது!

சிறந்த முறையில் புதிய உருவில்

கலாநிதி

சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம், ரேடியோ, ஆகிய
கலைத்துறை செய்திகள், விமர்சனங்கள், சித்திரங்கள்
நிரம்பிய வார இதழ்

விலை 2 அணா :: வருட சந்தா ரூ. 6.

ஏஜென்சி வேண்டுவோர் முன் பணத்துடன் விண்ணப்பிக்கவும்

77, ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, சென்னை-2.

நவம்பரில் வெளிவருகிறது!

திராவிடத்தின் சிறந்த எழுத்தாளர் ஒருவரின்
பேனுமுனையிலே உருவாகவிருக்கிறது.

இன்பம்

(வார இதழ்)

விவரங்கட்கு:

இன்பம்

83, பி. வி. அம்மன் கோவில் தெரு,
சென்னை-12.

விரைவில் எதிர்பாருங்கள்!

திரை

[வெள்ளித்திரை ஏடு]

பெரிய அளவில் ஏராளமான பக்கங்களுடன்!
திங்கள் ஒருமுறை - தித்திக்கும் 'திரை'!
பிரமிப்புத்தரும் அளவு படங்கள்!
இதுவரை இப்படியொரு பத்திரிகை வந்ததில்லை!

தனி இதழ் அணா 4.

பிரதியொன்றுக்கு 8 அணா விதம் முன்பணம் கட்டக்கூடிய
நாணயமான ஏஜண்டுகள்

எழுதுக:

நிர்வாகி: திரை
13, நல்லண்ண முதலி தெரு,
சென்னை-14.

இது ஒரு 'தென்றல்' வெளியீடு

Edited and Published by Kannadasan, 13, Nallanna Mudali Lane, Madras-14. and Printed by R. M. Kanagasabapathy at Elangovan Printers, 23, Muthu Mudali St., Madras-14.